கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி ருச	விளம்பி—சித்திரை	பகுதி க.
Vol. 54	1958—April	No. 1.

ஆதியுலா

[வித்துவான் ஆர். வீரபத்திரன் M. A., L. T.,
தமிழ் விரிவுரையாளர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்]

"செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" என்று கூறினர் திருவள்ளுவர். செவியால் நுகரப்படும் சொற்சுவை பொருட் சுவை மிக்க இலக்கியங்களும், இசைக்கலை வகைகளும் செவிச் செல்வம் என்று போற்றப்படும். பொருட்செல்வம் போலன்றி, செவிக்கு விருந்தாகி மனத்திற்கு மகிழ்ச்சியைத் தந்து, பண்பாட்டை வளர்த்து, வாழ்க்கையை மேம்படுத்துவதால் "அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" என்று கூறி நாயனர் மேலும் அதற்கு ஏற்றம் தருகிறர்.

சிறந்த இலக்கியங்களை இயற்றும் புலவர்கள் அவ்விலக்கியங்களின் வாயிலாக இறவாத புகழுக்கு உரியராகின்றனர். கலைத் துறையில் மட்டுமல்ல, சமயத்துறையிலும் இது உண்மையாகும். ஆண்டவனிடம் அன்புவைத்து அவன் அருளுக்கு உரியரான பக்தர்கள், ஒவ்வொரு தலைமுறையிலும் மிகப் பலர் இருத்தல் கூடும். ஆனல், அவர்கள் எல்லோரையும் நாம் அறிகின்றோமா? இல்லை. அவர்களுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், பன்னிரு ஆழ்வார்கள், சங்கரர், இராமானுஜர், பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்கர் முதலிய ஞானச் செல்வர்கள் நம்உள்ளத்

தில் என்றும் அழியாத இடம் பெற்றுள்ளனர். இதன் காரணம்: இம்மேன் மக்கள் சிறந்த சமய நூல்களை இயற்றி நமக்கு உதவி யிருப்பதேயாகும். அந்நூல்களின் வாயிலாக அவர்களது புகழ் நிலைத்து நிற்கின்றது.

பக்தி நூல்கள் யாவும் ஆண்டவன் திருப்புகழைப் பாடிப் பரவுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. ஒவ்வொரு பாட லிலும் இறைவன் திருவுருவம், அவனது அருட் செயல்களுமே பெரும்பாலும் வர்ணிக்கப்பட்டிருக்கும். சாதாரணமாக ஒரு பொருளை இரண்டாம் முறை கற்கும்போதும் கேட்கும்போதும், நமக்குச் சோர்வு தோன்றுவது இயற்கை. ஆனால் இறைவன் துதி யாகவரும் ஆயிரக்கணக்கான தேவாரப் பாடல்களும், திருவாச கச் செய்யுள்களும், திருமுறை நூல்களும், திவ்யப் பிரபந்தங்க ளும் எத்தனை முறைகற்றாலும் அலுப்புத் தட்டுவதில்லை. இதன் காரணமென்ன?

இந்நூல்களை இயற்றிய சமயத் தலைவர்கள், வெறும் பக்தர்க ளாக மட்டும் இராமல் சிறந்த கலைஞர்களாகவும் விளங்குகிறார் கள். அவர்கள் இறைவன் புகழ் ஒன்றையே பாடினாலும், அத னைக் கலை யுணர்ச்சியுடன் கற்பவர் உள்ளம் ஈடுபடும்படி, சொல் லும் முறையில் புதுமையும், நயமும் தோன்றப் பாடியுள்ளார்கள். ஆகவே, இந்நூல்கள் பக்தி நூல்களாகப் போற்றப்படுவதைப் போலவே உயர்ந்த இலக்கியக் கருவூலங்களாகவும் மதிக்கத் தக்கன.

சமயப் பாடல்களைக் குறித்துச் சிந்திக்கும்போது அவை காலத்துக்குக் காலம் வளர்ச்சிபெற்று வந்துள்ளமையை உணர் கிறோம். ஆதியில் தோன்றிய தெய்வ வணக்கப் பாடல்கள். இறைவன் திருவுருவையும் அவன் அணிந்திருக்கும் ஆடையாபர ணங்களையும், தரித்திருக்கும் ஆயுதங்களையும் வர்ணிப்பனவாய், எளிய முறையில் அமைந்துள்ளன. எட்டுத்தொகை நூல்களில் வரும் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் இதற்குச் சான்றாகும். அவை பாரதம் பாடிய பெருந்தேவனாரால் இயற்றப்பட்டன என்பர்.

எளிய முறையைப் பின்பற்றிச் சிலகாலம் பாடுகிறபோது, அது பழைய பாணியாகிக் கற்போர் உள்ளத்தை முன்போலக் கவரும் ஆற்றல் குன்றியதாகிறது. ஆதலால் புலவர்கள் பாக்களின் உயிர்நிலையாகிய பொருளிலும் அவற்றின் வடிவத்திலும் படிப்படியாகப் பல புதுமைகளை உண்டுபண்ண முயன்றனர்.

சமயப் பாடல்களில் அத்தகைய புதுமையைப் புகுத்த எண்ணிய புலவர்கள், முதலில், காதலை அதனோடு இணைத்தனர். அதற்கு முன்பெல்லாம் காதல், இலக்கியத்துறை ஒன்றில் மட்டும் அமைந்து அதற்கு வனப்பையும், செழுமையும் ஊட்டி வந்தது. இலக்கியங்களில் மனித உள்ளம் ஈடுபடுவதற்குக் காதல், வீரம் ஆகிய பொருள்கள் இன்றியமையாதனவாய்க் கருதப்பட்டன. எனவே புலவர்கள் அவற்றைப் பல கிளைகளாகவும், துறைகளாகவும் பகுத்து விரிவான இலக்கண வரம்புகளை அமைத்து வைத்தனர்.

இவ்விரு பொருள்களுள்ளும் காதலானது சிற்றின்ப வாழ்விற்கு உரியதும், இறை யுணர்ச்சிக்கு ஒரு வகையில் பகையாக அமைந்ததும் ஆகும். இத்தகைய காதலை இறைவனைப்பற்றிய துதிப் பாடல்களில் இணைப்பது ஓர் அரிய முயற்சியே என்பதில் ஐயமில்லை. சிறந்த கற்பனை வளமும், சொல்வன்மையும் உடைய கவிஞர்களால் மட்டுமே அக்காரியத்தைத் திறம்படச் செய்ய முடியும். காலமும் இடமுமறிந்து தக்க அளவில் நயமாகக் கையாளாவிடில் காதல் விரசமாய்ப் போய்விடும். அப்பொழுது பக்திச்சுவை கனிந்து சமய உணர்ச்சி ஓங்குவதற்குப் பதிலாகக் காம உணர்ச்சி மேலெழுந்து சமய ஞானத்திற்கு ஊறு விளைத்துவிடும். எனவே நெருப்பாறும், நூற்பாலமும் போன்ற இம் முயற்சி சாதாரண புலவர்களால் மேற்கொள்ளக்கூடியதல்ல. இறைவனிடம் ஆழ்ந்த பக்தியும், பெரும்புலமையும், கற்பனு சக்தியும் வாய்ந்த மேதைகளுக்கே இத்துறையில் வெற்றிகாண முடியும்.

மேற்கூறிய தகுதியுடைய புலவர் பெருமக்களின் கையில் காதலானது புடம்போட்ட பொன்னைப் போலத் தூய்மை அடை

கிறது. அவர்கள் தம்மை நாயகியாகவும், ஆண்டவனை நாயகனாக வும் கருதிக்கொண்டு ஓர் உத்தம நாயகி தன் நாயகன் பால் வைக்கும் ஆராக் காதலை உவமையாக்கித் தம் பக்தியை வெளி யிடுகிறார்கள். தலைவன் தலைவியரிடையே தோன்றும் உலகிய லான சிற்றின்பக்காதல் இவர்கள் கையில் ஜீவாத்மா, பரமாத்மா விடம் வைக்கும் பேரின்பப் பக்தியாகப் புனிதமடைகிறது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டை யடுத்தும் அதற்குப் பின்ன ரும், பக்திபாடல்களில் காதற் பொருளைக் கலக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. கி. பி. ஒன்பதாம் நூற் றாண்டில் சேரநாட்டை ஆண்ட சிவபக்தரான சேரமான்பெரு மாள் நாயனார், பக்தித்துறையில் அரியதோர் பிரபந்தத்தை இயற்றியருளினார். கோயில்களில் திருவிழாக் காலங்களில் இறை வன் திருவுருவை அலங்கரித்து வாகனங்களில் வைத்துத் திருவீதி களில் எழுந்தருளப்பண்ணுவது வழக்கம். அப்பொழுது ஆட வரும், பெண்டிரும், குழந்தைகளும் கூடி நின்று இறைவனை வணங்கித் தொழுவார்கள். இவ்வாறு எழுந்தருளுவதை இறை வன் உலாவருவதாகக் கற்பனைபண்ணி, அக்காட்சியைப் பேதை முதல் பேரிளம் பெண்வரையுள்ள எழுவகைப் பருவத்து மகளி ரும் கண்டு, இறைவனது வடிவழகில் ஈடுபட்டுத் தம் நிறை யழிந்து நின்றதாக ஒரு புதுமுறை இலக்கியத்தைச் சேரமான் பெருமாள் இயற்றியுள்ளார். இது உலாப்பிரபந்தம் என்று பெயர் பெறும். உலாவை முதல் முதலில் இயற்றிய பெருமை சேரமான் பெருமாளுக்கே உரியதாகும். இதனால் அவர் இயற்றிய உலா ஆதியுலா என்று அழைக்கப்படுகிறது. ஞானத்தை வளர்க்கும் நூலாதலால் ஞானவுலா என்ற பெயரும் அதற்குண்டு.

உலாவின் அமைப்பையும், அதன் பொருளின் வனப்பையும் தெரிந்துகொள்வதற்காக ஆதியுலாவைச் சற்று விரிவாக நோக்குவோம். உலாவில் இரண்டு முக்கிய பகுதிகள் உண்டு. முதற்பகுதி முதனிலை எனப்படும். பிற்பகுதி ஏழு உட்பிரிவு களைக் கொண்டிருப்பதால் பின்னெழுநிலை எனப் பெயர் பெறு கிறது. ஆதியுலாவின் முதனிலையில் சிவபெருமானின் பரத்துவ

மும். அவர் உயர்ந்த ஆடையாபரண அலங்காரங்களுடன், தெய்வச் சின்னங்களும் தேவர்களும் புடைசூழ, பல்லியம் முழங்க, மாடவீதியில் உலாவரும் மாட்சியும் சித்தரிக்கப்படுகின்றன. இறைவனின் பரம்பொருள் நிலையைக் கூறுமிடத்து, திருமாலும், பிரமனும், தேடியும் காணமுடியாதவர் என்றும்,

எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான் (7)

என்றும், எல்லாம் தாமாக நிற்பவர்; தம்மிற்பிறிதுருவம் இல்லாதவர் என்றும் சேரமான் பெருமாள் போற்றித் துதிக்கின்றார்.

பவனி வருதற்பொருட்டு இறைவனைத் தேவமாதர்கள் அலங்காரம் செய்கின்றனர். இவ்விடத்தில் ஆசிரியர் இறைவனின் அங்கங்களை வர்ணிப்பதுடன் அவற்றில் பூட்டிய அணிகளின் பெயர்களையும் விரிவாகக் குறிப்பிடுகிறார். அலங்காரம் முற்றுப் பெற்றபின் இறைவன் காளைவாகனத்தில் அமர்ந்து உலாவருகிறார். சேனாபதியான முருகன் அவருக்கு முன்னே செல்கிறான். பிரமன், திருமால், சப்தமாதர், கின்னரர், கிம்புருடர் முதலியோர் அவரைச் சூழ்ந்து செல்கின்றனர். இக்கூட்டத்தில் மன்மதனும் காணப்படுகிறான். அவனைக் குறிப்பிடும்போதும் கவிஞர்பெருமான் தன் பிரபந்தத்தில் காதலை அங்குரார்ப்பணம் செய்வார் போல

சங்கணையும் முன்கைத்தடமுலையார் மேலெய்வான்
கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த-ஐங்கணையான் (39)

—வளையலணிந்த முன்கையையும் பருத்த தனங்களையுமுடைய மாதர்கள் மேல் எய்வதற்காகத் தேன்பொருந்திய மலரம்புகளைக் கரும்புவில்லில் தொடுத்தமைத்த மன்மதன்—என்று கூறுகிறார். இறைவனுக்கு முன்னே குழல், யாழ், மத்தளம், துந்துபி முதலிய இசைக்கருவிகள் முழங்குகின்றன. மங்கலம் பாடுவோரும், தேவர்களும், முனிவர்களும் போற்றித் துதிக்கின்றனர். இவ்வாறு சிவபெருமான் உலாவருகிறார்.

இதன் பின்னர், இரண்டாம் பகுதியாகிய பின்னெழு நிலை ஆரம்பமாகிறது. ஈசன் உலாவரும் காட்சியை மாதர்கள் உயர்ந்த மாடங்களின்மீதிருந்து காண்கின்றனர். கண்டதும் அவர்கள் இறைவனின் பேரழகில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்துக் கரை கடந்த பக்தியில் ஆழ்கின்றனர். இறைவன் அணிந்திருக்கும் திருத்தாமத்தைப் பெறுவதற்கு அவர்கள் பெரிதும் விழைகின்ற னர். இங்ஙனமான பக்திப்பரவசச் செயல்களை, உலகியலில் ஒரு காதலி தன் காதலன்பால் வைக்கும் ஆராக்காதலோடு இணைத்து, மேல்நோக்காகப் பார்ப்பார்க்குக் காதல்போலவும், உள் நுழைந்து பக்திக் கண்ணோடு பார்ப்பார்க்குச் சிறந்த பக்தி அனுபவமாகவும் புலப்படும் வண்ணம் நாயனுர் பாடியிருப்பது அவரது மேதையை நன்குவிளக்குகிறது. இறைவன் மாலையைத் தந்து அருள்புரியா விட்டால் இரவு வந்து தம்மைத் துன்புறுத்தும் என்று அப்பெண் கள் வருந்துகிருர்கள். காதல் மிகுதியால் அவர்கள் கையிலணிந் துள்ள வளைகள் கழன்று விழுகின்றன. அந்நிலையில் இறைவன் பவனிவரும் வீதிக்கு அவர்கள் ஓடி வருகின்றனர். இவ்வாறு மாதர் செய்திகளைப் பொதுப்படக் கூறியபின் ஒவ்வொரு பருவ மங்கையர்க்குமுள்ள சிறப்பான நிகழ்ச்சிகளையும் அவ்வப் பருவத் திற்கேற்ற மனநிலைக்கேற்பத் தனித்தனியாக வர்ணிக்கிருர்.

முதலில் கூறப்படுவது 5-முதல் 7-வயதுவரையுள்ள பேதைப் பருவம். பேதைப்பெண் உலகியல் அறியாதவள். அவள் காதல் நோக்கு நோக்கவும், தன் இடை, உடை, நடை இவற் ருல் ஆடவரை மயக்கவும் இயலாதவள். ஒன்றையே எண்ணி, அவ் வொன்றையே சொல்லி அதன்படியே செய்யும் இயல் புடையவள். அவள் பாவையை வைத்து விளையாடிக்கொண்டி ருக்கும் வேளையில் சிவபெருமான் வீதியில் எழுந்தருளுகிருர். அவரைப் பேதை காண்கிருள். கண்ட அக்கணமே அவள் உள் ளத்தில் காதல் அரும்பத் தொடங்குகிறது. இக்கருத்தைக் கவிஞர் பேதை காமநூல் கற்பதற்த நாட்செய்துகொண்டாள் என்று கூறுவது மிக்க நயமுடையதாகும்.

இரண்டாவது பருவம் பெதும்பைப் பருவம், இப்பருவத்திற் குரிய வயது 8-முதல் 11-வரையாகும். உலகியலை அறிந்தும் அறியாதும் இருக்கும் பருவம் இது. ஆதலால் இப்பருவத்துப் பெண்களின் காதல் நிலையை வர்ணிப்பது அருமையுடையதாகும், இதனால் "பேசும் உலாவிற் பெதும்பை புலி" என்ற கூற்றுப் பின்னுளில் எழுந்தது. பெதும்பைப் பெண்ணின் முகத்தை வர்ணிக்கும்போது, அது இரண்டு கெண்டைமீன்களையும் ஒரு சிவந்த தொண்டைக் கனியையும், முத்துக்களையும் வளைந்த விற்களையும் செம்பவளத்தையும் தன்பாற்கொண்ட ஒரு தாமரை மலர்போல விளங்கியது என்று கவிஞர் கூறுகிறார். கெண்டைமீன் கண்ணையும், தொண்டைக்கனி வாயையும், முத்து பல்லையும், வில் புருவத்தையும், பவழம் இதழையும் சுட்டுகின்றன. அப்பெண் மன்மதன் உருவைச் சித்திரத்தில் தீட்டிக்கொண்டிருக்கும் வேளையில் சிவபெருமான் வீதியில் எழுந்தருளுகிறார். அவரைக் கண்டதும் அவளது நாணமும், அறிவும், நிறையும் அழிகின்றன. அவள் அணிந்திருந்த வளைகள் கழன்று விழுகின்றன; ஆடை நெகிழ்கிறது. அவள் தன்னையே மறந்து நின்றுவிடுகிறாள்.

மூன்றாவதான மங்கைப் பருவம் 12-வயது முதல் 13-வரையுள்ள பெண்ணின் நிலையைக் குறிக்கும். அப்பெண்ணின் "அங்கை கமலம், அடி கமலம், கொங்கை கமலம், முகம் கமலம்." உந்தி கங்கைநீர்ச்சுழியையும், இடை வஞ்சிக்கொடியையும், தோள் மூங்கிலையும், கூந்தல் அறலையும் ஒத்திருக்கின்றன. அவள் பொற்கூட்டில் வளரும் நாகணவாய்ப்புள்ளோடு சொல்லாடிக்கொண்டிருக்கும் வேளையில் வெள்ளிமலைமேல் உதித்தெழும் சூரியன்போலக் காளை வாகனத்தில் சிவபெருமான் காட்சி தருகிறார். அவரைக் கண்டதும் அம்மங்கை காதல் மயக்குற்று, இறைவனது மாலையையும் தனது மாலையையும் பார்க்கின்றாள். பின்பு அவன் அழகையும் தனது அழகையும் ஒப்புநோக்குகின்றாள் உடனே அவள் நெடிதுயிர்த்துக் காதல் வெள்ளத்தில் விழுந்து, அழுந்துகிறாள்.

நான்காவது பருவம் 14 முதல் 19 வயது வரையுள்ள மடந்தைப் பருவம் ஆகும். மடந்தை தீந்தமிழ் போன்ற தெய்வவடிவமுடையாள். அவள் ஈசனது சிலையைப் புருவமாகவும், முருகனது வேலைக் கண்ணுகவும் கொண்டுள்ளாள். அவள் கழுத்தில் அணிந்துள்ள முத்தாரம் சந்திரனைச் சூழ்ந்து விளங்கும் நட்சத்திரங்கள் போல் காட்சி அளிக்கின்றன. அவள் தோழியர்களுடன் மடல் வண்ணம் பாடிக்கொண்டிருக்கும் வேளையில் இறைவன் ஊர்ந்து வரும் வெள்விடையின் மணியோசையைக் கேட்டு அப்பக்கமாக நோக்குகின்ருள். அப்போது சிவபெருமானின் திருவுருவம் அவள் கண்ணிற் படுகிறது. உடனே மடந்தையின் நெற்றி சிவப்பேறுகிறது; கால் நடுங்குகிறது; உடை நெகிழ்கிறது; கண்களில் நீர் பெருகுகிறது. அவள் தன் காதல்நோயை வாய் விட்டுக்கூறி அல்லலுற்று ஆழ்துயரில் அழுந்துகிருள்.

ஐந்தாவதான அரிவைப் பருவத்துப் பெண் 20-க்கு மேல் 25 வரையுள்ள வயதுடையவள். நாயனுர் அவள் முகத்தை ஆகாயத்துடன் ஒப்பிடுகிருர். ஆகாயத்தில் திங்களும் தாரகைகளும், வில்லும், மேகமும், செவ்வாய்க்கிரகமும் நிலவுவதுபோல அரிவையின் முகத்திலும் திங்கள் போன்ற நெற்றியும், முத்தாரமும், புருவமும், கூந்தலும், சிவந்த வாயும் உள்ளன. அப்பெண் தனது பருத்த தனங்களிலும் அல்குலிலும் அணிகளை அணிந்துள்ளாள். ஆனுல் தனங்களின் பாரத்தால் மெலிந்திருக்கும் இடையில் அவள் எவ்வகை அணியையும் அணியவில்லை. இச்செய்தி திருவள்ளுவர் கூறியபடி,

> இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
> எல்லாரும் செய்வர் சிறப்பு (752)

என்னும் உலகியலை விளக்குவதாக உள்ளது என்று ஆசிரியர் கூறுவது மிக்க நயமுடையதாகும். அவள் வீணையை மீட்டி இறைவன் புகழைப் பாடிக்கொண்டிருக்கும் வேளையில் அவர் உலாவரும் ஆரவாரம் கேட்கிறது. உடனே அவள் வீணையையும், இசையையும், தமிழ்ப்பாட்டையும் கைவிட்டு, ஈசனுக்கு

முன் தன் நிறையழியாது காத்துக்கொள்ளப்போவதாக வீர மொழி கூறி எழுகிருள். ஆனல் இறைவனை நேரில் பார்த்த போது அவள் கட்டுரைகள் யாவும் பயனற்றுப்போகின்றன. அவள் கூந்தல் அவிழ்கிறது; ஆடை நெகிழ்கிறது. அவற்றை அவள் சீர்செய்துகொள்கிருள். இறைவனை வணங்குவதற்காகக் கையை மேல்நோக்கிக் கூப்பி இருப்பதால் அவற்றில் அணிந் துள்ள வளைகள் கழன்றுவிழாமல் நிற்கின்றன ஆற்ருமையால் அவள் பெருமூச்சு விடுகிருள்.

ஆருவது பருவம் தெரிவை எனப்படும். 26 முதல் 31 வயது வரையுள்ள மாதர்களைக் குறிக்கும் பருவம் அது. கவிஞர் தெரி வையைப் புலரி, உச்சி, அந்தி, இரவு என்னும் சிறுபொழு தோடும், கார் இளவேனில் ஆகிய பெரும்பொழுதோடும் உவ மித்துக் கூறுவது கற்று மகிழ்தற்குரியதாகும். இத்தெரிவை தெளிவற்ற மழலைச்சொற்களைப் பேசும் இயல்புடையவள். பொழுது விடியும் புலரிக்காலத்தில் மக்கள் உறக்கம் கலையாத நிலையில் பேசும் மொழியும் மயக்கம் தருவதாக இருக்குமன்ருே? இதனைப் புலரியின் பண்பாகக்கொண்டு கவிஞர் அப்பொழுதினைத் தெரிவைக்கு உவமை கூறுகின்ருர். இங்ஙனமே ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டுத் தெரிவையை ஏனைப்பொழுதோடும் உவமித்துக் கூறுவது நயமாக உள்ளது. அப்பெண் அணிந்திருக் கும் சிலம்பு

அறிவுடையீர் நின்மின்கள் அல்லார்போம் என்று
பறையறைவ போலும் (156)

என்கிருர் புலவர். அவள் தனது நகில்கள் மைந்தர்களின் மனத் தைக் கவரும் என்று எண்ணி அவற்றைப் பூங்கச்சினுல் பூட்டிவைத்திருக்கிருள். கண்ணின் சினத்தை அஞ்சனம் பூசித் தணிக்கிருள். அவள் வெள்ளிப் பலகையில் பொற்கவற் றினை வைத்துச் சூதாடிக்கொண்டிருக்கும் வேளையில் உலாவரும் ஈசனது சடாமுடி அவள் கண்ணில் படுகிறது. உடனே காதல் உணர்ச்சி அவள் உள்ளத்தைக் கவிந்து எழுகிறது. இறைவன்

அணிந்துள்ள மாலையே தனக்கு ஆறுதலளிக்கும் என்று எண்ணு கிருள். இறைவனிடம் தன் ஆயத்தார் சென்று மாலையைக் கேட்டு வாங்கிவருமளவும் விரகதாபத்தை அவளால் ஆற்றுதல் அரிது. இந்நிலையில் அவள் மெய் சோர்ந்து அழகு கெட்டு நிற் கின்ருள்.

ஏழாவது பருவம் பேரிளம்பெண் எனப்படும். அதற்குரிய வயது 32-முதல் 40வரை ஆகும். பேரிளம்பெண் இதற்குமுன்பு பல ஆண்டுகளாக இல்லற வாழ்வில் ஈடுபட்டிருந்தவள். எனவே இப்பருவத்தில் அவளது காதலுணர்ச்சிதணிந்து உள்ளம் இறைவ னிடம் நாட்டம்கொள்வது இயல்பு. இவ்வியல்பிற்கேற்பக் கவிஞர் பேரிளம்பெண்ணை வர்ணிப்பது பாராட்டுதற்குரியது. அவள்

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உளஎன்று—வண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள். (173-174)

என்று கவிஞர் கூறுகிருர். இங்கே அவர்பெரு வழக்காக உள்ள ஒரு திருக்குறளை (1101) எடுத்தாண்டு பேரிளம்பெண் இல்லற இன்பத்தை நுகர்ந்தவள் என்பதைக் குறிப்பால் சுட்டுகிருர். கணவன் தன் கண்ணுற் கண்டும், செவியாற் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் மோந்தும். மெய்யால் தீண்டியும், காதல் இன் பவத்தைத் துய்த்த ஐம்புலன்களும் அவன்பால் உள என்ற கருத்து அவள் இல்லற வாழ்வில் அனுபவம் பெற்றவள் என்ப தைப் புலப்படுத்துகிறது. அவள் சிவபெருமானை நினைத்து

கண்ணவனையல்லது காணுசெவியவன
தெண்ணரும் சீரல்ல திசைகேளா—அண்ணல்
கழலடி யல்லது கைதொழா வஃதால்
அழலங்கை கொண்டான்மாட் டன்பு (188-189)

என்ற வெண்பாவைப் பாடிக்கொண்டிருக்கும் வேளையில் ஈசன் வீதியில் உலா வருகிருர். அக்காட்சியைக் கண்டு அவள் காத

லால் கை சோர்ந்து, அகமுருகி, மெய் வெளுத்து மயக்கமுறு கின்ருள்.

இங்ஙனமாகச் சிவபெருமான் உலாப்போந்த தெருப் பெண்களின் ஆரவாரம் பெரிதும் உடையதாக இருந்தது.

நூலின் முதற்பகுதியில் சேரமான் பெருமான் இறைவனின் பரத்துவத்தை நன்கு விளக்கித் தாம் பாட எடுத்துக்கொண்ட பக்தி நூலுக்கேற்ற சூழ்நிலையை சிருஷ்டிக்கின்ருர். இரண்டாம் பகுதியில் பேதை முதலிய பலவகைப் பருவத்துப் பெண்களின் காதல் நிகழ்ச்சிகளை வெளிப்படையாக வர்ணிக்கும் முகமாக வெவ்வேறு பக்குவ நிலைகளை எய்தியுள்ள ஆன்மாக்களின் பக்தி அனுபவங்களை உய்த்துணர வைக்கின்ருர். உடலுக்கு உறுதி தரும் மருந்து சற்றுக் கசப்பாக இருந்தால் அதனைச் சர்க்கரையில் பொதிந்து தாய்மார்கள் குழந்தைகளுக்கு அளிப்பதுபோல, இயல்பிலே இறைவனிடம் ஈடுபடாதார் உள்ளங்களைக் காதல் வர்ணனையின் துணையால் நாயனுர் ஈடுபடும்படிச் செய்கிருர். பருவ மங்கையர்களின் வர்ணனையில் காதல் அரும்புதல், வளர்தல், முதிர்தல் முதலிய பற்பல நிலைகளையும் கூறிவந்து இறுதியிலுள்ள பேரிளம் பெண்ணை வர்ணிக்கும்போது அதனைக் காதல் தணிந்த நிலையில் தோன்றும் பக்தி அனுபவமாகப் பாடி, நூலின் இறுதியில் பக்திச் சுவை பரிமளிக்கும் வண்ணம் அமைந்திருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

இவ்வுலாவைச் சேரமான் பெருமாள் சுந்தரமூர்த்தி நாயனுருடன் கைலைக்கு எழுந்தருளியபோது அங்கே சிவபெருமான் சந்நிதியில் பாடி இறைவனை மகிழ்வித்ததாகவும், அங்கு அதனைக் கேட்டிருந்த மாசாத்தனுர் சோணுட்டுத்திருப்பிடவூரில் வைத்து உலகுக்கு அருளியதாகவும் ஒரு வரலாறு சொல்லப்படுகிறது. இது இவ் வுலாவின் அருமையைப் பாராட்டுவதற்கும், அதற்குத் தெய்வத் தன்மையைக் கற்பிப்பதற்கும் எழுந்ததாதல் வேண்டும்.

இவ் வாதியுலாவை அடுத்துத் தோன்றிய மற்ருேர் உலா ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையாகும். அது திருஞான

சம்பந்தர் மீது நம்பியாண்டார் நம்பியால் பாடப்பட்டது. இவ்விரு உலாக்களும் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றிற்குப்பின் வேறுபல உலாக்கள் எழுந்தன. மதுரைச் சொக்கநாதர் உலா, திருப்பூவணநாதர் உலா, திருவாரூர் உலா, திருக்கழுக்குன்றத்து உலா, திருவானைக்கா உலா முதலியன சிவபெருமான்மீதும், திருவேங்கடநாதர் உலா, திருக்குறுங்குடிநம்பி உலா என்பன திருமால்மீதும் தணிகை உலா, போரூர் உலா, இலஞ்சி முருகன் உலா முதலியன முருகன்மீதும் பாடப்பட்டன.

இறைவனைப் பாடுவதற்கென ஆதியில் தோன்றிய இப்பிரபந்தம் பின்னர் அரசர்களைக் குறித்துப் பாடுவதற்கும் கையாளப்பட்டது. 12-ம் நூற்றாண்டினரான ஒட்டக்கூத்தர் தம்மை ஆதரித்த விக்ரம சோழன், இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று சோழ வேந்தர்களையும் குறித்துப் பாடிய உலாக்கள் இலக்கியச் சிறப்புமிக்கனவாகும். இவற்றால் 'உலாவிற்கு ஒட்டக்கூத்தன்' என்ற புகழ் அவ்வாசிரியருக்கு உண்டாயிற்று.

உலாப் பிரபந்தத்திற்கு உரியவாகச் சில இலக்கிய மரபுகள் உள்ளன. அதில் வரும் பெண்களை இயற்பெயர் சுட்டிக் கூறுதலாகாது; ஆனால் உலாத்தலைவனை அப்பெயர் கூறிச் சிறப்பிக்கலாம். உலா நூலைக் கலிவெண்பாவிலேயே பாடவேண்டும். கலிவெண்பா என்பது கலித்து வருதலையுடைய அல்லது பெருகிக் கொண்டு வருகிற வெண்பா என்று பொருள்படும். நேரிசை வெண்பாவின் முதலிரண்டடிகள் மீண்டும் மீண்டும் கோவை போன்று பொருள் தொடர்புடையதாய் வந்துகொண்டிருக்கும். இவ்வாறு வருகிற இரண்டு அடிகளுக்குக் கண்ணி என்று பெயர். நூலின் முடிவிலுள்ள கண்ணி சிந்தடியால் நாள், மலர் ஆகிய வாய்பாடுகளுள் ஒன்றைப்பெற்று முடியும். உலாவில் வர்ணிக்கப்படும் காதற் செய்திகள் குலமகளிர்க்குரியவல்ல எனவும், பொதுமகளிர்க்கு உரியவாம் எனவும் கூறுவர்.

ஆதி யுலா சமயத்துறையில் வேறுபல காதற் பிரபந்தங்கள் தோன்றுவதற்கு வழிகோலியது. திருமங்கையாழ்வார் பாடிய திருமடலும், சிறிய திருமடலும் இதனை யடுத்துத் தோன்றியன வாம். திருமால்மீது காதல்கொண்ட பெண்கள் அவரை அடைதற் பொருட்டு மடலூரப் போவதாகக் கூறுவதே இப்பிரபந்தத்தின் பொருள். ஆதியுலாவில் மடந்தைப் பருவ வர்ணனையில், மடந்தை தோழியருடன் சிவபெருமான்மீது மடல் வண்ணம் பாடிக்கொண்டிருக்கும்வேளையில் அப்பெருமான் வீதியில் எழுந்தருளினர் என வந்துள்ளது. இதிலிருந்து சிவபெருமானைப் பற்றிய மடல் நூல் ஒன்று முன்பு இருந்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

கோவை என்னும் காதற் பிரபந்தமும் உலாவிற்குப் பின்னரே தோன்றியதாதல் வேண்டும். தலைவன் தலைவியர்கள் ஒருவரையொருவர் ஊழ்வினை வழ்வதால் கண்டு சாதல் கொள்வதிலிருந்து அவர்களிடையே நிகழும் அகவொழுக்கங்கள் அனைத்தையும் பற்பல துறைகளாக வகுத்துக் கட்டளைக் கலித்துறையில் அந்தாதித் தொடராகப் பாடுவதே கோவை இலக்கியம். இதனை முதன் முதலில் இயற்றி வழிகாட்டியவர் மாணிக்கவாசகர், அவர் பாடிய கோவை திருக்கோவையார் எனப்படும். பள்ளு, குறவஞ்சி முதலிய அகப்பொருள் துறை அமைந்த இலக்கியங்களும் பிற்காலத்தில் இறைவன் மீது பாடப்பட்டன.

இவ்வாறு பக்தித் துறையில் காதற் பிரபந்தக்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த சேரமான் நாயனர் இளங்கோவடிகள் பிறந்த சேரகுலத்தில் 9-ம் நூற்ருண்டில் தோன்றிக் கொடுங்கோளூரிலிருந்து சேர நாட்டை ஆட்சிபுரிந்து வந்தவராவார். வைணவ ஆழ்வார்களில் ஒருவரான குலசேகரர் இவருக்குப்பின் பிருந்தவர் என்றும் முன்பிருந்தவர் என்றும் இருவகையான கருத்துக்கள் உள்ளன. சேரமான் பெருமாள் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உயிர் நண்பர். இவ்வுலாவே யன்றி. பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை என்னும் வேறு நூல்களையும் அவர் பாடியுள்ளார். அவையும் உயர்ந்த பக்தி நூல்களாகவும் சிறந்த தமிழ்-இலக்கியங்களாகவும் போற்றப்படுகின்றன.

சோழர் காலத்து ஆடலும் பாடலும்

டாக்டர் மா. இராசமாணிக்கனர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

சங்க காலத் தமிழர் ஆடல் பாடல்களில் சிறந்திருந்தனர் என்பதற்குரிய சான்றுகள் சங்கநூல்களில் மிகுதியாகக் காணப் படுகின்றன. அக்காலத்து ஆடலும் பாடலும் அடைந்திருந்த உயர்ந்த நிலையைச் சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையாலும் அதன் உரையாலும் நன்கு அறியலாம்.

பல்லவர் வாழ்ந்த நாயன்மார்—ஆழ்வார் காலத்தில் ஆடலும் பாடலும் பெற்றிருந்த மேன்மையைத் திருமுறைப் பாக்களைக் கொண்டும், ஆழ்வார் அருட்பாடல்களைக் கொண்டும், பல்லவர் சிற்பங்களைக் கொண்டும், 'மத்த விலாசம்' போன்ற வடமொழி நூல்களைக்கொண்டும் பாங்குற உணரலாம்.

பல்லவர்க்குப் பிற்பட்டுவந்த சோழர்கள் (கி. பி. 900-1300) தென்னுட்டை ஒரு குடைக்கீழ் வைத்து ஆண்டனர்; பாடல் பெற்ற கோவில்களைக் கற்றளிகளாக மாற்றினர்; புதிய கற்கோவில்களை எடுப்பித்தனர்; பெருங்கோவில்களில் ஆடல் மகளிரையும் பாடல் மகளிரையும் பலராக நியமித்தனர்; அவர்களுக்கு வீடும் நிலமும் வழங்கினர்; கோவில்களில் திங்கள்தோறும் ஏதேனும் ஒரு விழா நடைபெற ஏற்பாடு செய்தனர்; எல்லாக் கோவில்களிலும் திருமுறைகள் ஓத வழி செய்தனர். இந்த உண்மைகளைக் கல்வெட்டுக்களால் அறிகின்ரேம்.

ஆடலும் பாடலும்:

குறிப்பிட்ட நாட்களிலும் விழாக் காலங்களிலும் ஊர்வலத்திலும் ஆடல்-பாடல்கள் நிகழ்ந்தன. இராஜராஜன் தான் கட்டிய பெரிய கோவிலில், தமிழ்நாடு முழுவதிலும் இருந்த பல கோயில்களிலிருந்து ஆடல் - பாடல்களில் வல்ல 400-பேரை ஆடல்-பாடல்கள் நிகழ்த்த வரவழைத்தான் எனின், அவன் காலத்திலேயே கோவில்களில் ஆடலும் பாடலும் உயரிய நிலை

யில் இருந்தன என்பதை நன்கு அறியலாம்.[1] சோழர் காலத்தில் பெரும்பாலான கோவில்களில் ஆடலிலும் – பாடலிலும் வல்ல பெண்கள் இருந்தனர் என்பதைப் பல கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.[2] கோவில்களில் தமிழ்க் கூத்து, ஆரியக்கூத்து (themes from Sanskrit Puranas) சாக்கைக் கூத்து, சாந்திக் கூத்து என்பன ஆடப்பட்டன[3]. நடனக்கலை ஆசிரியர் **கூத்தரசன், நிருத்தப்பேரரையன், நட்டுவ ஆசான்** எனப் பலவாறு பெயர் பெற்றனர்.[4] அவர்கள் பெற்றிருந்த காணி,**கூத்தக்காணி, நட்டுவக்காணி** எனப்பட்டன.[5] திருவிடைமருதூரில் தளியிலார்க்கும் தேவரடியார்க்கும் பாட்டுக் கற்பிக்கப் பாணன் இருந்தான். அவன் பெற்றிருந்த மானியம் **'பாணப்பேறு'** எனப்பட்டது.[6] இராசராசன் I, திருநீலகண்டயாழ்ப்பாணரது மரபில் வந்த பாணரைக்கொண்டு திருப்பதிகங்கட்குப் பண் வகுக்கச் செய்தான்[7] என்பதைக்காண, சோழர்காலத்தில் பாணர் இருந்து தமிழிசையை வளர்த்துவந்தனர் என்பது தெரிகிறது. திருவெற்றியூர்க்கோவிலில், **பதியிலார்** என்பவர் 'சொக்கம்' என்பதையும் 'சந்திக்குணிப்பம்' என்பதையும் நடித்துக் காட்டினர். அந்நடிப்புக்கு **ரிஷபத்தளியிலார்** வாய்ப்பாட்டு வழங்கினர். பின்பு ரிஷபத்தளியிலார் அகமார்க்கம், வரிக்கோலம் என்பவற்றை நடித்துக் காட்டினர். பதியிலார் சிலவகை நடனங்களைத் திருப்பதிகப் பொருளுக்கேற்ப நடித்துக்காட்டினர். சந்திக்குணிப்பம், இடவு, மலைப்பு, அகமார்க்கம், செந்தூக்கு, வரி என்பன அந்நடனவகையுள் சிலவாகும்.[8]

---

1. South Indian Inscriptions, Vol. 2, No. 66.
2. 116 of 1926, 617 of 1920, 272 of 1923 etc.
3. 120 of 1925, 250 of 1826, 154 of 1895, 254 of 1914; A. R. E. 1924—25, p. 82.
4. 23 of 1895, 255 of 1925, 206 of 1931,
5. 206 of 1931, S. I. I. II 66.
6. 141 of 1895; S. I. I. V 705.
7. திருமுறைகண்ட புராணம், செ. 31-34,
8. A. R. E. 1913, pp. 118, 127.

இவ்விவரங்களால் திருமுறைப் பாக்கள் இசையுடனும் நடனத்துடனும் பயிலப்பட்டன என்பதை அறியலாம். ஆடலிலும் பாடலிலும் நன்முறையிற் பயிற்சிபெற்ற இந்த இசைவாணிகள் சமயத்தொடர்பான பாக்களைப்பாடி, அவற்றை நடனத்திலும் அமைத்துக் காட்டினமை மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருக்கலாம். மக்கள் உள்ளங்களில் சமயப்பற்றை இவை நன்றாக ஊட்டி யிருத்தல் வேண்டும். இந்நடன மங்கையர் சிறந்த அழகிகள்; கண்ணைக் கவரத்தக்க ஆடையணிகளையும் கூந்தல் ஒப்பனையையும் பெற்றவர்கள். அவர்களைப் பற்றி ஓரளவு அறிய தஞ்சைப் பெரியகோவில் ஓவியங்கள் துணைபுரியலாம். சோழர் காலத்தில் இருந்த ஆரிய நடனவகைகள் எல்லாம் தில்லைக் கோவிற் கிழக்குக் கோபுரத்திற் சிறக்கக்காணலாம். [9] அவை அக்கால நடனக்கலையின் உயர்வை நன்கு உணர்த்தவல்லவை.

நாடகம்

நாடகத்தையே ஒரு பகுதியாகக்கொண்ட தமிழ்மொழி வழங்கும் நாட்டில் நாடகங்கள் நடந்தன எனக்கூறல் மிகை. சோழர் காலத்தில் ஆண்டுதோறும் வைகாசி விழாவில் தஞ்சைப் பெரிய கோவிலில் இராஜராஜேசுவர நாடகம் நடித்துக் காட்டப் பட்டது. நடித்த விஜயராஜேந்திர ஆசாரியனுக்கு ஆண்டு தோறும் 120 கலம் நெல் தரப்பட்டது. இராஜராஜேசுவரம் என்பது தஞ்சையில் இராசராச சோழன் கட்டிய பெரிய கோவிலாகும். அக்கோவிலின் பெயர் நாடகத்திற்கு அமைந்திருத்தலை நோக்க, இராஜராஜேசுவரம் கட்டப்பெற்றதையே பொருளாகக் கொண்டு இந்நாடகம் அமைந்திருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். [10] விக்கிரமாதித்த ஆசாரியன் என்ற இராஜராஜ நாடகப் பெரியன் என்பவன் பந்தணைநல்லூரில் நட்டுவப்பங்கு மெய்மட்டிப்பங்கு (நாடகக்காணி?) இவற்றைப் பெற்றவனாய் இருந்தான் என்று அவ்வூர்க் கல்வெட்டுக் கூறுவதால், இராஜராஜ நாடகம் (முதலாம் இராஜராஜனைப் பற்றியது) என ஒன்று

9. A. R. E. 1914, pp. 74–83; Plates I to IV.
10. S. I. I. II 67

இருந்தது: அந்நாடகம் நடிக்கப்பட்டது என்பன அறியலாம். இந்நூல் அவ்வரசனது வரலாற்றை நாடகமுறையில் எழுதப் பெற்றதாகும்.[11] முதற்குலோத்துங்கன் காலத்தில் **பூம்புலியூர் நாடகம்** என்ற ஒன்றுசெய்யப்பட்டது: அதனைச் செய்தவனுக்குப் பரிசு தரப்பட்டது.[12] அது திருப்பாதிரிப்புலியூரைப் பற்றியது. அஃது அம்மன் கன்னிகையாக இருந்து சிவனை வழிபட்டமை, அப்பர் சமணராயிருந்தமை, பின் சைவரானமை, சமணருடைய கொடுமைகட்கு ஆளானமை, பிறகு கடலில் மிதந்து கரைசேர்ந்து, அவ்வூர்க் கோவிலில் பதிகம் பாடினமை, மகேந்திரன் அங்கிருந்த சமணப்பள்ளியை இடித்துக் குணபர ஈசுவரம் கட்டினமை போன்றவற்றைக் காட்சிகளாகக்கொண்ட நூலாக இருக்கலாம். அது நடிக்கப்பெற்றமைக்குச் சான்று இல்லையாயினும், சமயப்பற்று மிக்கிருந்த அக்காலத்தில் அது நடிக்கப்பட்டதெனக் கருதுதல் தவறாகாது. இங்ஙனம் சைவ அரசர்களையும், நாயன்மார்களையும் பற்றிய நாடகங்கள் சிலவேனும் அக்காலத்தில் நடிக்கப்பட்டன எனக் கொள்ளலாம்.

தேவரடியார்

கோவில்களில் இருந்து தொண்டாற்றிய மாதருள் தேவரடியார் ஒரு வகையினர். இவர்கள் கோவில் திருவலகிடல், திருமெழுகிடல், இறைவனுக்குப் படைக்கும் உணவுக்குரிய அரிசியைத் தூய்மையாக்குதல், திருப்பதியம்பாடல் முதலிய பணிகளைச் செய்துவந்தனர். மேலும் இவர்கள் விபூதித்தட்டுகளையும் மலர்த்தட்டுகளையும் விழாக்காலங்களில் ஏந்தி நிற்பர்: அம்மனுக்குக் கவரிவீசி நிற்பர்.[13] இப்பெண்கள் **கவரிப்பிணா** எனப் பெயர் பெற்றனர்.[14] முதற் குலோத்துங்கன் காலத்தில் படைத்தலைவனாக இருந்த அச்சப்பிடாரன், கணபதிநம்பி என்பவன் தன் குடும்

11. தமிழ்ப்பொழில், 23, பக். 152-3
12. 129 of 1902
13. 128, 212 of 1912.
14. 117 of 1910, 149 of 1936: "பெண்ணும் பிணாவும் மக்கட்குரிய"—தொல், பொருள் சூ. 616.

பத்தைச் சேர்ந்த பெண்கள் சிலரைத் திருவல்லம் சிவன்கோவிலுக்குத் தேவரடியாராக விடுத்தான். அப்பெண்கள் சூலப்பொறி பொறிக்கப்பெற்றனர்; கோவிலுக்கும் கடவுளுக்கும் தொண்டு செய்ய விடப்பட்டனர்.[15] உயர்நிலைப் பெண்களும் சோழர்காலத்தில் திருக்கோவிலில் திருப்பணிகள் செய்ய, தம்மைத் தியாகம் செய்தனர் என்பதும், தேவரடியார் என்பவர் கலைத்தொண்டிலும் சமயத்தொண்டிலும் ஈடுபட்டிருந்தனர் என்பதும் இதனால் நன்கு விளங்கும். தேவரடியாருள் சிலர் நடனமாடவும் அறிந்திருந்தனர்.[16]

தளியிலார்

இவர்களை இராஜராஜன் **தளிச்சேரிப் பெண்டுகள்** என்று குறிப்பிட்டான். இவர்கள் கோவிலுக்கு வெளியே குடும்பமாக வாழ்ந்தவர்கள்; இசை–நடனங்களில் வல்லவர்கள். இவர்கள் சைவ–வைணவக் கோவில்கள் என்ற வேறுபாடின்றி வேலை செய்தவர்கள்,[17] இவருள் சிவன்கோவிற் பணிசெய்தவர் 'இடபத் தளியிலார்'[18] என்றும் (இடபப்பொறி பொறித்தவர்கள் அல்லது சிவன் கோயிற் பெண்கள் எனப் பொருள்படலாம்), வைணவக் கோவில்களில் இருந்தவர் 'ஸ்ரீ வைஷ்ணவ மாணிக்கம்'[19] எனவும் பெயர் பெற்றனர் எனக் கருதக் கல்வெட்டுக்கள் இடந்தருகின்றன; இவர்கள் இராஜராஜன் காலத்தில் ஆடல்-பாடல்களில் முனைந்திருந்தனர்; பின்னர்த் திருப்பதிகங்கள் பாடவும் தொடங்கினர்; சோழர் ஆட்சியின் இறுதியில் தேவரடியாரைப் போலக் கவரிவீசல் முதலிய பணிகளையும் மேற்கொண்டனர்.[20]

---

15. A.R.E. 1922, p. 102; A.R.E. 1913, p. 108; A.R.E. 1925, p. 84.
16. 212 of 1912.
17. S. I. I: II 66.
18. 212 of 1912.
19. 183 of 1923.
20. S. I. I. II 66; 141 of 1895; 212 of 1912; A. R. E. 1913, pp. 194, 118 and 127–8.

கோவில்களில் திருமுறைகள்

இராஜராஜன் திருமுறைகளைச் செம்மைப்படுத்தற்கு முன்பே திருவல்லம், எறும்பியூர், பழூர், ஆவடுதுறை, தவத் துறை, ஆத்தூர், குமாரவயலூர், அந்துவநல்லூர் முதலிய சில ஊர்க்கோவில்களில் திருப்பதிகங்கள் ஓதப்பட்டன.[21] இராஜ ராஜன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலில் திருப்பதிகம் ஓத 48 பேர் பல கோவில்களிலிருந்தும் வரவழைக்கப்பட்டனர் என்ப தால், அவரவர் வந்த கோவிலிலும் முன்னரே திருப்பதிகம் ஓதப் பட்டு வந்ததென்பது புலனாகும். அவை திருவாஞ்சியம், ஆரூர், வாய்மூர், மறைக்காடு, ஐயாறு, திருவிடைமருதூர், ஆனைக்கா, வெண்காடு, தில்லை முதலியன.[22] பிற்பட்ட சோழர்காலத்தில் குஹூர், பிரம்மதேசம் (N. A. Dh.), முதுகுன்றம், வீழிமிழலை, நல்லம், கடைமுடி, மாறன்பாடி, ஒற்றியூர், தென்னேரி, உடையலூர், துக்கச்சி, சோற்றுத்துறை, எல்வானசூர், ஆமாத் தூர், தில்லையாடி, புறவார் பனங்காட்டூர், கழுமலம், இடைவாய், வழுவூர், புகலூர், எண்ணாயிரம், தில்லையாளி நல்லூர் முதலிய ஊர்க்கோவில்களில் திருப்பதியம், திருச்சாழல் முதலியன ஓதப் பட்டன.[23]

திருப்பதிகங்களைப் பிராமணர்,[24] தேவரடியார்,[25] பிடாரர்[26] (ஓதுவார்) ஓதினர்; உடுக்கை, மத்தளம், தாளம் இவற்றுடன் ஓதினர்; சில கோவில்களில் காலையிலும், சிலவற்றில் காலை மாலைகளிலும் வேறு சிலவற்றில் மூன்று வேளைகளிலும், விழா நாட்களிலும் ஓதினர். மார்கழி மாதத்தில் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை என்பன கோவில்களில் பாடப்பட்டன. சுருங்கக்கூறின், நாயன்மார் பாடிய அருட்பாடல்கள் அவர் கட்குப் பிற்பட்ட சோழர்காலத்தில் பெருஞ்சிறப்புற்றன.

---

21. 129 of 1914, 349 of 1918, 139 of 1925, 99 of 1927, 373 of 1903, 149 of 1937; S. I. I. III 139.
22. S. I. I. II 65.
23. 275 of 1917, 199 of 1915, 40 of 1918 etc.
24. 99 of 1929
25. 128 of 1912
26. S.I.I. II 65

எந்நாளோ?

[நாவரசன்]

1 வருங்காலச் சிற்பிகளே! வாழும் நல்ல
வழியறிந்து போதற்கே முன்பு செல்வீர்!
பெரும்பொழுதைப் பயனின்றிப் போக்கி விட்டுப்
பேருலகில் அழிவதுதான் நன்றோ சொல்வீர்!
அருமைமிகு தமிழ்மொழியில் பேசி னாலே
அடிமைமிகு தாழ்நிலைதான் போகும்; இன்பந்
தருங்காலம் அன்றேதான் வருமே; கன்னித்
தமிழுணர்ச்சி மிகுவிக்கும் நாளெந் நாளோ!

2 வானுலகில் பூத்திருக்கும் வான வில்லின்
வடித்தெடுத்த கவின்வனப்பை, வற்றி டாமல்
தேனெனவே சுரக்கின்ற ஊற்று நீரில்
தெவிட்டாமல் தோன்றுவதோர் அழகு தன்னைக்
கானில்வளர் மான்புலிகள் சேர்ந்து வாழும்
கண்கொள்ளாக் காட்சிதனைக் காணுந் தோறும்
"ஏனிந்தத் துயர்க்கடலில் வாழு கின்றோம்?"
என்றெண்ணும் நிலைமாறிச் சிறப்ப தெந்நாள்?

3 செவியின்பம் தருகின்ற வண்டி னொலியே
செம்மையுடன் வாழ்கின்ற பறவை யினமே,
புவியெங்கும் வளர்கின்ற இயற்கை தம்மைப்
புதுப்பொருளாய்த் தந்நூலில் தெளிவு றுத்தும்
கவிஞருளம் வாழ்கின்ற உலகு தன்னில்
காணாத புத்தம்புதுக் காட்சி தம்மைப்
புவியுள்ளோர் எல்லோரும் கண்டு ணர்ந்து
புரைநீக்கி வாழுகின்ற நாளெந் நாளோ?

பாட்டும் பெயரும்

(மா. ரா. இளங்கோவன் எம். ஏ.,)

சிறப்பும் பெயரும்

மனிதனுடைய மனம் வியக்கத் தகுந்ததாக உள்ளது. தனக்கு நல்லது செய்தவர்களை அது என்றும் மறப்பதில்லை. அவர்கள் காலத்தினுல் செய்த உதவிகளை மறவாமல் போற்றும் சிறப்பு மனத்துக்குண்டு. உதவிகளை எண்ணி, உதவியவரைப் போற்றும் மனம் அப்பொருந்தகையாளர் பெயரை வேண்டுமாஞலும் மறந்து விடும்; ஆனுல் அவர்கள் செய்த உதவிகளை மறவாது.

சங்க காலத்தில் புலவர்கள் பலர் தமிழர்தம் வாழ்வியலைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். தமிழ்ப் பெருமக்கள் காலப்போக்கில் அவர் தம் பெயரை மறந்து விடாமல் போற்றிக் காத்துள்ளனர். ஆயின், ஒரு சில புலவர் பெருமக்களுடைய பெயர்கள் காணப்படவில்லை. புலவர் பெருமக்கள் பெயர் காணப்படாத இடங்களெல்லாம் அப்பாடல்களைத் தொகுப்பித்த ஆசிரியர் அவர்களுக்குச் சிறப்புப் பெயரை வழங்கியுள்ளார். அந்த அளவில் தொகுப்பித்தவருடைய மனம் அமைதியுறுகின்றது. அப்பெயர்கள் தொகுப்பித்தவர் தம் மனப்போர்க்கிற்கேற்பத்தரப்பட்டவையல்ல. புலவர்களுடைய பாடல்களைப் படித்த அவர், அவர் தம் பாடல்களில் பொதிந்து கிடக்கும் சிறப்புக்களை உணர்ந்து சுவைத்து, பிறரும் சுவைக்க வேண்டும் என எண்ணி, அவற்றையே பெயராக அளித்தனர். தாம் பாடிய பாடலில் அமைந்த சிறப்புத் தன்மைகளால் பெயர் பெற்ற புலவர்கள்பலரைக் குறுந்தொகையில் காணலாம். அவர்களைப் பற்றி இங்கு அறிவோம்.

செம்புலப் பெயல் நீரார்

நம்பி ஒருவன் நங்கை ஒருத்தியைக் கண்டான். இருவரும் நெருங்கிப் பழகினர்; அன்பால் பிணைப்புண்டனர்.

தலைவி தலைவனுடைய போக்கில் மாறுபாடு கண்டாள்; அவன் தன்னைவிட்டுப் பிரிந்து விடுவானே என்று எண்ணி ஐயுற்ருள்.

அவள் ஐயுறுவதைத் தலைவன் தெரிந்து கொண்டான்; அவள் து ஐயத்தைப் போக்கவேண்டும் என்று எண்ணினான்; அவளை நோக்கிக் கூறலானான்.

"தலைவி, நீ சிலவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் ஒருவர்க் கொருவர் எத்தகைய உறவின் முறையினராவர்? என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையில் உறவினர் ஆவர்? இப்போது இணைபிரியாமல் உள்ள நாம்தாம் இதற்கு முன்னர் எவ்வாறு அறிவோம்? இவை மூன்றும் இல்லாதென அல்லவா? இல்லாதனவாகிய இந்த மூன்றும் உண்டாயினவற்றை நீ எண்ணிப்பார்.

"செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் அந்த நிலத்தின் தன்மையை அடைவதை நீ பார்த்திருப்பாய். அதுபோல-அதாவது, மழை நீர் செம்மண் நிலத்தில் பெய்து அதன் தன்மையைப் பெறுவது போல நம்முடைய அன்புடைய நெஞ்சங்கள் கலந்தன. அதனால் முன்பின் அறியாத நீயும் நானும் இணைந்தோம். உன் தாயும் என் தாயும் உறவு பெற்றனர் உன் தந்தையும் என் தந்தையும் உறவினராயினர். எனவே, நான் பிரிவதாக நீ கருதலாமா?;;

தலைவி அவனுடைய பேச்சைக்கேட்டு ஆறுதல் பெற்றாள்; நெஞ்சம் கலந்தமையால் தலைவன் இனிப்பிரியான் என்று நம்பித் தேறினாள்.

அன்புடைய நெஞ்சங்கள் கலந்தன என்பதைக் கூறவந்த புலவர் அதற்குவமயைாகச் செம்புலப் பெயல் நீரை–செம்மையான புலத்தில் பெய்த மழைநீரைக் கூறினர். எனவே, புலவர் **செம்புலப் பெயல்நீரார்** எனப் பெயர் பெற்றார்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செமபுலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

குறுந்தொகை: 40.

அணிலாடு முன்றிலார்

ஒரு தலைவன் தன் தலைவியை விட்டுப் பிரிந்தான். அவனைக் காணாமையால் தலைவி வருந்தினாள். அந்த வருத்தத்தால் அவள் உடல் மெலிந்தது. தோழி தலைவியின் மெலிவைக் கண்டு வருந்தி

ளுள்; ஆறுதல் கூறினுள். ஆனுல் அதனுல் எந்தப் பயனும் ஏற்படவில்லே. தலைவி தனக்கு ஆறுதல் கூறிய தோழியைப் பார்த்துத் தன்னுடைய கவலைக்கும் அதனுல் அமைந்த மெலிவுக்கும் காரணம் கூறத் தொடங்கினுள்.

''தோழி, தலைவர் நம்மிடம் இருப்பின் நான் பெரிதும் மகிழ்வேன். விழா நடைபெறுங்கால், அந்த ஊரில் உள்ளவர்கள் பெருமகிழ்ச்சி அடைவது போலத் தலைவர் என்னேடு இருக்கும் பொழுது நான் மெய்யாகவே மகிழ்வேன்.

''அவர் என்னை விட்டுப் பிரிந்து செல்வதை என்னுல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. பாலைநிலத்தில் மக்கள் வாழாத இல்லத்தின் முற்றத்தில் அணில்கள் விளையாடுவதைப்போல என் னிலைமை அமைந்துள்ளது. மக்கள் இல்லாத அணிலாடு முற்றம் கொண்ட தனியான வீடு போலல்லவா நான் இப்போது உள்ளேன். இந்த நிலையில் உன்னுடைய ஆறுதலைக் கேட்டு நான் எப்படி அமைதிபெற முடியும்?''

இதுதான் தலைவியின் பேச்சு, அவள் தன் வருத்தத்துக்கு விளக்கம் கூறுகையில், பாலை நிலத்தில் யாருமில்லாத தனி வீட்டைப் பற்றிக் கூறுகின்ருள். யாருமில்லாததால் அணில்கள் மகிழ்ச்சியாக ஆடிக்கொண்டிருக்கும் நிலையையும் கூறுகின்ருள். தன் மனத்திலிருந்த எண்ணங்களைக் கூறினமையால் அவள் ஓரளவு ஆறுதல் பெற்ருள்.

இப்பாடலில் அமைந்த சிறப்புடைய காட்சி **அணிலாடு முன்றிலே** ஆகும். மக்கள் வாழாமையால் வீட்டின் முற்றத்தில் அணில்கள் எந்த வித அச்சமும் இல்லாமல் விளையாடல் இயல்பேயாகும். மக்கள் இருப்பின் அணில் வராது என்பதை நாம் அறிவோம். தலைவி, தலைவன் தன்னேடு இருப்பின் மகிழ்வதாகக் கூறியதோடு நில்லாமல், விழாவுடைய ஊரைப்போல மகிழ்வேன் என்ருள். ஓர் ஊர் இயல்பாகச் சிறப்புக்களைக் கொண்டிருக்குமாயின் அந்த ஊர் விழாக்காலத்தே மேலும் பல சிறப்புக்களைப் பெறும். அது போலவே, தலைவி தனக்கமைந்த இயற்கையான நலன்களோடு தலைவன் இருக்கும் போது சிறப்பான விளக்கம் பெற்று இருக்கக் கூடும் என்று கூறுகிருள். பாலைநிலத்தில் யாரும் இல்லா இல்லம் என்று அவள் கூறியது. பாலைநிலத்து வெம்மையின் கொடுமைக்கும் ஆறலைக் கள்வரால் வரும் துன்பத்திற்கும் அஞ்சி மக்கள் வெற்றிடம் செல்வர் என் புதை விளக்குவதாகும்.

அணிலாடும் முன்றிலைப் புலவர் தலைவன் பிரிவால் தனித்துத் துயருற்று வாழும் தலைவிக்கு உவமை கூறியமையால், அவர் **அணிலாடு முன்றிலார்** என்னும் பெயர் பெற்றார்.

"காதலர் உழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொள் ஊரிற் புகல்வேன் மன்ற
அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
மக்கள் போகிய **அணிலாடு முன்றில்**
புலப்பில் போலப், புல்லென்(று)
அலப்பேன் தோழியவர் அகன்ற ஞான்றே"

குறுந்தொகை, 41.

குறள் மலர் ஓங்குகவே

[வித்துவான் கு. மா, திருநாவுக்கரசு]

இராகம்: அம்சத்துவனி. தாளம்: ஆதி.

முதல்

குறள் மலர் ஓங்குகவே — இந்தக்
குவலய முழுவதும் கொள்கையில் அரும்பிடும் (குறள்)

இடை

அறநெறி மிகுந்திட ஆண்மைகள் விளங்கிட
நறுந்தமிழ் மொழியினில் நவிற்றிய வள்ளுவர் (குறள்)

இறுதி

அன்பெனும் தாயீன்ற அரும்பெருங் குழவியாம்
அருளெனும் செல்வந்தனை யாவரும் அடைந்தே
இன்னலை நீக்கியே இன்பமாய் வாழவே
கன்னல் தமிழ்மொழியில் கழறிய வள்ளுவர்
(குறள்)

செந்தமிழ்க் கல்லூரி

தமிழகமெங்கும் தண்டமிழின் சிறப்பும்புகழும் பெருகி வரும் இக்காலத்தில் 'பாண்டியநாடு' எனப் போற்றப்படும் மதுரை, திருநெல்வேலி' இராமநாதபுர மாவட்டங்கள் அடங்கிய பகுதியில், சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ள தனித்தமிழ்க் கல்லூரி ஒன்று இல்லாத ஒரு பெருங்குறையைப் போக்க வேண்டி, 'மதுரைத் தமிழ்ச்சங்கச் சார்பில் ஒரு தமிழ்க் கல்லூரியைத் துவக்கி நடத்துவது' என்று முடிவு செய்யப்பட்டது. இம்முடிவு, மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா நடைபெற்று முடிந்தநாளில், சங்கத்துறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

பிறகு, 3—7—57 அன்று நாவலர், கணக்காயர், டாக்டர் திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் தலைமையில் தமிழ்க் கல்லூரியின் தொடக்க விழா நடைபெற்றது. இக்கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டு 10—7—57 முதல் நடைபெற்று வருகின்றது.

இக்கல்லூரிக்குத் திரு. இரா. வே. நாராயணன் M, A. அவர்கள் முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார். இதில் தமிழ் விரிவுரையாளர்கள் மூவர் பணியாற்றி வருகின்றனர். அவர்கள்;

1. திரு. சா. மரிய இராசாமணி, M. A.
2. திரு. கு. மா. திருநாவுக்கரசு, வித்துவான்,
3. திரு. மா. இரா. இளங்கோவன், M. A.

இவ்வாண்டில், புகுமுகம், வித்துவான் முதனிலை முதலாண்டு, இறுதிநிலை முதலாண்டு ஆகிய மூன்று வகுப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன.

வகுப்பு		மாணவர்களின் தொகை
1. புகுமுகம்	———	25
2. முதனிலை முதலாண்டு	———	25
3. இறுதிநிலை முதலாண்டு	———	7
	ஆக.	57

மாணவர்களும் மாணவிகளும் சேர்ந்து 57 பேர் பயில்கின்றனர், இவ்வாண்டு, பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புத் தேர்வுக்கு 21 பேர் சென்று தேர்வு எழுதியுள்ளனர்.

மாணவர்களுக்கு நுழைவுக் கட்டணத்தைத் தவிர வேறு எவ்விதக் கட்டணமும் இல்லை. இவ்வாண்டு, வெளியூர் மாணவர்கள் தங்கிப் படிப்பதன் பொருட்டு விடுதியொன்று தொடங்கப் பட்டுள்ளது. அதில் 15 மாணவர்கள் வந்து தங்கியுள்ளனர், உணவுக்கும் நன்கு வசதி செய்யப்பட்டிருக்கின்றது,

இக்கல்லூரி 10—4—58 முதல் மூடப்பட்டு மீண்டும் 19—6—58 (வியாழக்கிழமை) அன்று திறக்கப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது,

மதுரை
10—4—58

கி. பழனியப்பன்,
கல்லூரிச் செயலாளர்.

தமிழவேள். திரு. பி. டி. இராசன் அவர்களுக்குப் பாராட்டு விழா

தமிழவேள், திரு. பி. டி. இராசன் B. A., Bar-at-Law அவர்கள் சென்னை மேலவை யுறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றமை குறித்து, 27-12-57 அன்று மாலை 5-மணிக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் முன்னர் அமைந்துள்ள அழகிய காவணத்தில் சங்கச் சார்பில் அவருக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு நாவலர். கணக்காயர். டாக்டர். திரு. ச. சோமசுந்தர பாரதியார் M.A., B.L., தலைமை தாங்கினார். தொடக்கத்தில் செந் தமிழ்க்கல்லூரி மாணவியர் இறை வணக்கம் பாடினர். பிறகு சங்கச் சார்பிலும், செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் சார்பிலும், மதுரைத்திருவள்ளுவர் கழகச் சார்பிலும் திரு. இராசன் அவர்கட் குப்பாராட்டிதழ்கள் படித்துக் கொடுக்கப்பெற்றன.

தலைவர் பேசும்போது, திரு. இராசன் அவர்களைப் பாராட்டு தற்குப் புதிதாக வொன்றுமில்லை; அவர் இயல்பாகவே நல்ல பண் புகள் அமையப்பெற்றவர்; தமிழர்களிடத்து நாளுக்குநாள் தன் மான வுணர்ச்சி குன்றி வருகின்றது; அதனால்தான் வடநாட்டார் சிலர் நம்மை இழிவுபடுத்திப் பேசி வருகின்றனர்; இந்நிலை நீடிப் பின் தாமோ, திரு. இராசன் அவர்களோ என்ன செய்ய இயலும்? அறிவென்பது வெறும் மதிநுட்ப மட்டுமன்று; மதிநுட்பத்தை நல்லவற்றுக்கும் தீயவற்றுக்கும் பயன்படுத்தலாம்; அதனால் தான் திருவள்ளுவர் அறிவுக்கு இலக்கணங் கூறிய பொழுது "சென்றவிடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின்பா லுய்ப்ப தறிவு" என்று கூறினர்; தமிழ் மக்கள் இனி வாளா விருத்தல் கூடாது; மொழிப்பற்று, நாட்டுப்பற்று மிக்கவர்களாகத் திகழ வேண்டும்" என்று கூறினர்.

அடுத்துச், சங்க முன்னாள்செயலரும், வழக்குரைஞருமாகிய திரு. என். ஆர். கிருஷ்ணசாமி ஐயங்கார் பாராட்டிப் பேசும் போது, "பார் என்பது உலகம்; ஆட்டு என்பது விழா; ஆகவே பாராட்டு என்ற சொல் உயர்ந்த சொல்" என்றும் "திரு. இரா

சன் அவர்களைப் பெற்றுச் சென்னை மேலவை பெருமை பெற்றது'' என்றும் கூறினர்.

பின். நன்றி தெரிவிக்கும் முகத்தான் திரு. இராசனவர்கள் பேசும் பொழுது, ''இப்பாராட்டுக்கள் நான் இன்னும் நல்ல முறையில் நாட்டுக்கும் மொழிக்கும் பணிசெய்ய வேண்டுமெனத் தூண்டுவதாகக் கொள்கின்றேன். தேர்தலில் ஈடுபட்டு ஓராண்டுக் காலத்தை வீணாக்கி விட்டேன். இல்லாவிடில் சங்கவளர்ச்சிக்கு இன்னும் பல செயல்களைச் செய்திருக்கலாம்'' என்று குறிப்பிட்டார்கள்.

பின். புகழ் பெற்ற வழக்குரைஞரும் முன்னாள் மாவட்ட நடுவருமான திரு. P. அரங்கசாமிநாயுடு B. A, B. L. அவர்கள் அனைவருக்கும் நன்றி நவில, மாணவியர்களின் நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது. பிறகு மதுரை ஏழிசைச் செல்வி. திருமதி. M. S. பொன்னுத்தாய் குழுவினரின் இசையரங்கு நடைபெற்றது.

''மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 56-வது ஆண்டு நிறைவு விழா''

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 56-வது ஆண்டு நிறைவுவிழா, சங்கத்தின் முன்னர் அமைந்துள்ள அழகிய காவணத்தில் 28-12-57 அன்று மாலை 3-மணிக்குத் தொடங்கிச் சிறப்பாக நிகழ்வுற்றது. இடைவிடாமல் மழை பெய்து கொண்டிருந்தும் விழாவிற்குத் திரளான மக்கள் வந்து குழுமியிருந்தனர்.

சென்னை உயர் நீதிமன்ற நடுவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள், சங்கத்துணைத் தலைவர் திரு. இராசன் அவர்கள் தலைவருக்குப் பொன்னாடை போர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்கள். தொடக்கத்தில் செந்தமிழ்க் கல்லூரி மாணவிகள் இறைவணக்கம் பாடினர்.

தலைவர் முன்னுரையில், ''இச்சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவருக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்

டிருக்கின்றோம். சங்கம் பண்டுபோல இன்னும் சிறந்த முறையில் செயல்பட வேண்டும். யாவற்றுக்கும் தலைமை தாங்கவேண்டும். எந்த நூலும் சங்கத்தில் அரங்கேற்றம் செய்யப் பெறல் வேண்டும். அங்ஙனம் ஒப்புக்கொண்ட நூலுக்குச் சங்க நூல் என்று சொல்லிக்கொள்ளும் உரிமை வழங்கப்பட வேண்டும். நாளும் சங்கத்தில் ஏதேனும் நல்லன நடந்து கொண்டிருத்தல் வேண்டும். இதற்குச் சங்க ஆட்சியாளர் ஆவன செய்தல் வேண்டும்'' எனக்கூறிச் சங்கம் நீடுநின்று நெடிய புகழ்விளக்க! என வாழ்த்தினர்

அடுத்து, மதுரை வட்டாரக் கல்வி ஆய்வாளர்—திரு. எம். முகமதுகனி எம். ஏ. எல் டி. அவர்கள், ''கவிதைநயம்'' என்னும் பொருள் பற்றிப் பேசுங்கால், கவிதை என்பது பண்டைச் சங்க இலக்கியங்களைப் போல் மக்கள் வாழ்வை எதிரொலிப்பனவான இருக்கவேண்டும், சொல்தோறும் அணியிருக்க வேண்டும்; ஆழமிருக்க வேண்டும், 'ஒரு சொல்லை நீக்கினும் அதன் இயல்பு குன்றிவிடும்; அணிதன்றிவிடும்' என்று சொல்லுமாறு அமைந்திருக்க வேண்டும்'' எனக் கூறிப் புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலிருந்து பாடல்களை எடுத்துக்காட்டி நயம்பட விளக்கினர்

பின்னர், புதுக்கோட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரி முதல்வர், திரு. சு. பழனிசாமி அவர்கள் ''தமிழர் எதிர்காலம்'' என்னும் பொருள் பற்றிப் பேசும் போது, ''பேசுவதும் எழுதுவதும் மரபையொட்டியிருக்க வேண்டும். தமிழில் ஆட்சி நடத்தற்குரிய சொற்களை நாம் எங்கும் தேடி அலைய வேண்டுவதில்லை. நம் கருவூலத்தில் நிரம்பப் பொருளிருக்கக் கடன் வாங்க முற்படலாமா? ஆங்கிலத்தின் நிலை வேறு. அது ஒரு கதம்பமொழி. இன்றுள்ள ஆங்கிலத்தின் நிலையைக் கருதின் நூற்றுக்குப் பத்து விழுக்காடுதான் தனி ஆங்கிலச் சொற்கள்காண முடியும்: பிறவெல்லாம் இலத்தீன், கிரீக்கு. பிரெஞ்சு, செர்மன், தமிழ் முதலியன வாகும். ஆனல் தமிழைப் பொருத்தமட்டில் இந்த நிலையில்லை. தமிழிலேயே ஆட்சிச் சொற்கள் அனைத்தையும் அமைக்கமுடியும்.

வேண்டுமாயின், காலத்திற்கேற்ப அறிவியற்கலைச் சொற்கள் சில வற்றை நாம் கடன்வாங்கிக் கொள்ளலாம். அது குற்றமாகாது. ஞாயிறு, வெய்யோன், கதிரோன், பரிதி என்ற சொற்களி ருக்க, சூரியனைச் சூழ்வானேன்? திங்கள், மதி, நிலவு என்ற சொற்களிருக்க, சந்திரனைச் சாடுவானேன்?" என இங்ஙனம் பல மேற்கோள் எடுத்துக்காட்டி ஆழ்ந்த கருத்தோடு அறிவுரை புகன்றார்.

பிறகு சங்கத் தேர்வுகளில் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அடுத்துச் சங்க முன்னாள் செயலாளர் திரு. என். ஆர். கிருஷ்ணசாமிஐயங்கார் நன்றிநவில, மாணவியர் நாட்டு வாழ்த்துப் பாடலோடு விழா இனிது முடிந்தது.

கண்காட்சி

விழாவையொட்டிச் சங்கத்தில் தமிழர் வரலாற்றுக் கண் காட்சியொன்று ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது, இதனை யேற்று நடத்தியவர் விசயநகரத்து மன்னர் மரபில் வந்த ஓரகண்டி, வணங்காமுடி, திரு. கனகய்யாநாயுடு அவர்கள். இக்காட்சியில் பாண்டியன் நெடுஞ்செழியன், சுந்தரபாண்டியன் முதலியவர் காலத்து நாணயங்களும், வாள்களும் வைக்கப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

செக்-நாட்டுத்தமிழறிஞர் சுவலபெல் அவர்கட்குப் பாராட்டு விழாவும் பொன்னாடை போர்த்து விழாவும்

10-3-58 அன்று மாலை 6-மணிக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத் தின்சார்பில் செக்கோசுலோவேகியா நாட்டுத்தமிழறிஞர், டாக்டர், திரு. கமில் சுவலபெல் அவர்களுக்குப் பாராட்டு விழாவும் பொன்னாடை போர்த்து விழாவும் நடைபெற்றன. அவ்வமயம் பாராட்டு விழாவிற்கு முன்னாள் மாவட்டநடுவர் திரு. பி. ரெங்க சாமி நாயுடு அவர்கள் தலைமைதாங்கினார்கள். செந்தமிழ்க் கல்லூரி மாணவிகளின் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் கூட் டம் தொடங்கியது.

தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில், "அந்நியர் ஆட்சியின் இடையூறுகளால் நம் மக்கள் அடிமைப்பட்டுத் தமிழின் பெருமையை உணரமுடியாதிருந்தனர்; இன்றுதான் விழிப்புற்றிருக்கின்றனர்; முதல், இடை, கடைச் சங்கங்களின் வரிசையில் நான்காஞ் சங்கமாக இன்றைய மதுரைத் தமிழ்ச்சங்கம் விளங்குகிறது. பழைய முறைப்படித் தமிழ்ச்சங்கச் சார்பில் டாக்டர் கமில் புலவரைப் பாராட்டுகிறோம்; டாக்டர் கமில் அவர்கள் எவ்வித பலனையும் கருதாமல் ஆர்வத்துடனும் ஆராய்ச்சியுள்ளத்துடனும் தமிழ்மொழியைப் படித்து வருவது பாராட்டுதற்குரியது; அவர் பழைய தமிழ்ச்சங்கம் அளித்த பெருமையாகக் கருதி, என்றும் தமிழ்ப்பணி புரியவேண்டும்" எனக் கூறித் தமிழ்ச்சங்கச் சார்பில் பொன்னாடை போர்த்திப் ,பல்லாண்டு வாழ்க' எனவாழ்த்தினர்.

பின்னர், மதுரை-இராமநாதபுரம் வணிகக்கழகச் செயலாளர். திரு. வி. பி. ஆர். கங்காராம்துரைராசு அவர்கள் திரு. சுவலபெல்லைப் பாராட்டிப் பேசினர். இது தமிழக வரலாற்றில் இல்லாத புது நிகழ்ச்சி என்றும், செக்நாட்டுத் தமிழறிஞரின் வருகையால் நமக்குப் புத்துணர்ச்சி பிறந்துள்ளது என்றும் அவ்வுணர்ச்சி என்றும் குறையாதவாறு தமிழர்கள் நல்ல தமிழில் பேசித் தமிழை வளர்க்கப் பாடுபடவேண்டும் என்றும் பேசினர்.

தலைவர் அவர்கள் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட சில நூல்களைச் சங்கச்சார்பில் டாக்டர் கமிலுக்கு அளித்தார்.

பிறகு டாக்டர் கமில் சுவலபெல் அவர்கள், தம்மைப் பாராட்டியதற்கு, நன்றிதெரிவித்துப் பேசியபொழுது, "தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழே பாடமொழியாக இருக்க வேண்டும்; மாணவர்கள் தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் பயிலவேண்டும்" எனக் கூறினர்.

பின் கூட்டத்திலிருந்து கேட்கப்பட்ட பல கேள்விகளுக்குத் தக்கமுறையில் பதிலளித்தார். அவ்வமயம், எமது நாட்டுப் பல்கலைக்கழகங்களில் செக் மொழியே பாடமொழியாகவுள்ளது. அதுபோல இங்குத் தமிழ் இல்லாதிருப்பது வியப்பாக இருக்கிறது

என்றும், உலகில் எளியமொழி—ஆங்கிலம், கடினமொழி—தமிழ், நான் விரும்பும் மொழி—தமிழ் என்றும், நற்றிணை முதலிய எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு, திருக்குறள், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, சிலப்பதிகாரம் முதலியவற்றை நன்கு படித்துள்ளேன் என்றும் திருக்குறளிலுள்ள காமத்துப்பால், தென்னகத்தின் பண்பாட்டை விளக்கும் சிறந்த பகுதி என்றும் தமிழ்ப்புலவர்களில் தலைசிறந்தவர் கம்பர்; எனினும் கம்பராமாயணத்தை விடச் சிலப்பதிகாரமே சிறந்ததாக எனக்குத் தோன்றுகிறது என்றும், நல்ல தமிழ்ச்சொற்கள் இருக்கும்பொழுது-பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தக்கூடாது. எடுத்துக்காட்டாக, வானொலி என்ற அழகான தமிழ்ச்சொல் இருக்கும்பொழுது ஆகாசவாணி என்ற சொல்லைப் பயன்படுத்துவது அறிவீனமாகும் என்றும் எமது நாட்டிலுள்ள கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகத்திற்குச் சிறந்த தமிழறிஞர் இளைஞராகத் தேவை; அவ்வாறு வருபவர் 2 ஆண்டுகள் செக் நாட்டிலிருந்து தமிழ் கற்றுக்கொடுக்கவும் தமிழ் ஆராய்ச்சி செய்யவும் தயாராக இருக்கவேண்டும் என்றும் கூறினர்.

பிறகு, செந்தமிழ்க்கல்லூரி முதல்வர் திரு. இரா. வே. நாராயணன் அவர்கள் அனைவருக்கும் நன்றிகூற, மாணவிகளின் நாட்டு வாழ்த்துடன் கூட்டம் முடிவுற்றது.

திரு. சுவலபெல்லுக்குப் பொன்னாடை போர்த்தல்.

1957, டிசம்பர் 28-ம் நாள் நடைபெற்ற

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 56-ம் ஆண்டு விழாத் தலைவர்

சென்னை உயர்நீதிமன்ற

நீதிபதி, உயர்திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள்

நிகழ்த்திய

தலைமையுரை

அன்பர்களே,

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 56-வது ஆண்டு நிறைவு விழாவிற்கு அவைத் தலைமை தாங்கும் பெருமையை எனக்கு அளித்ததற்காகச் சங்கத்தின் ஆட்சி அலுவலர்களுக்கு எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழ்ச் சங்கத்திற்குக் கடை அல்லது இறுதி என்ற இழுக்கு இருந்தமையை நீக்கிய புகழ் இச்சங்கத்தைச் சாரும். இது நாலாம் சங்கம் ஆயினமையின் இதுகாறும் கடைச்சங்கம் என்று வழங்கப்பட்ட மதுரைத் தமிழ்ச்சங்கம் இனி மூன்றாம் சங்கம் என வழங்கப்படும்.

அநேக நூற்றாண்டுகளாகச் சங்கம் என்ற நிலையம் மறைந்திருந்த போதிலும் தமிழ்மக்களுக்குத் தமிழ்மீதிருந்த பற்றும், அன்பும் ஒருபோதும் குன்றவில்லை. மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்துத் தமிழ் மக்கள் அதற்கு முன்னுள்ள சங்கங்களில் திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானும், குன்றம் எறிந்த குமரவேளும், கழகமோடமர்ந்து பசுந்தமிழைப் பண்ணுறத்தெரிந்து ஆய்ந்து வந்தனர் என்று நம்பினார்கள். அதனால் ஆதிகாலந்தொட்டே தமிழ் மக்கள் தாங்கள் வணங்கும் தெய்வம் தமிழ்மொழியில் இரண்டறக் கலந்து நிற்றல் வேண்டுமென்ற அவாக் கொண்டிருந்தனர் என்று புலனாகின்றது. மூன்றாம் சங்கம் செயலற்ற பின்னும் தங்களது அன்புக்கும், சேவைக்கும் பாத்திரமான இறைவன் தமிழ் இசையில் உருக வேண்டும், அவனது அருள்வாக்கு தமிழ் வாக்காக இருக்க

வேண்டும் என்ற நாட்டம் தமிழ்மக்களிடம் ஒரு சிறிதும் தணியவில்லை. இறைவனும் இணங்கித் தமிழில் நூல் இயற்றினன்; அறிவுரை செய்தான்; அடி எடுத்துக் கொடுத்தான்; தடுத்தாட் கொண்டான். இறைவன் கருணைக்குத் தாம் பாத்திரமானதற்குச் சான்ருய் திருநாவுக்கரசர் 'தமிழோடு இசைபாட மறந்தறியேன்' என்று முறையிட்டார். அவன் மனம் குளிர்ந்தான். திருமறைக் காட்டில் அப்பர் திறக்கப்பாடினுர். அவரினும் செந்தமிழ் உறைப்புப்பாடி அடைப்பித்தார் சம்பந்தர்.

பின்னுள் "முத்திறமும் வழுத்தவொண்ணுப்
பெருவெளிக்கும் அப்பா லாயுள்ளபொரு
ளீதெனவே பெரிதுஞ் சேயோன்"

என ஒருவனையே புகழ்ந்தவரு ளருணகிரிநாதரும் அவனது அருணதள பாத பத்மம் அனுதினமுமே துதிக்க அரிய தமிழ் தானளித்தான் என்ருர்.

அது மட்டுமன்று; தந்தைக்குச் சாமியாய் அருமறைத் தமிழ் நூல் தெரிந்துரைக்கும் புலவோன் என்றும், இவனைநிகர் பொதியவரை முனிவனுக்குக் குருவாய் அவன் அகமகிழ் இருசெவி குளிர இனிய தமிழ் பகர்வோனே என்றும் பரிந்து புகழ்ந்தார்.

இவ்வாறெல்லாம் தண்ணூர் தமிழ், தென் தமிழ், தீந்தமிழ், பசுந்தமிழ், கன்னித்தமிழ், தெய்வத்தமிழ் என்று பெயரிட்டுத் தமிழ்மக்கள் இன்புறுவதெல்லாம் ஏதோ காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு என்ற முறையில் ஏற்பட்ட கேவலம் இயற்கை வாஞ்சைதானு, அல்லது உண்மையிலேயே இம் மொழிக்கு அழகுடன் பொருள் தாங்கி உணர்த்தும் வலியும், நலனும் உளதா என ஒரு சிறிது சிந்திக்கலாம்.

கிரேக்கதேசம், உரோமாபுரி, எகிப்து, பாபிலோனியா, பாரசீகம், அரேபியா முதலியநாடுகள் குன்றின்மேல் விளக்காய் விளங்கிய காலந்தொட்டே தமிழ்நாட்டின் ஒளி நாகரிக உலகமெங்கும் பரவி வந்திருக்கிறது. மூன்ருவது சங்க காலத்திலேயே தமிழரது வாழ்க்கை அநேக ஆயிர வருடங்களாக நாகரிக முறையில் நடத்தப்பட்ட வாழ்க்கையாதலால், தமிழ்ச் சமுதாயம் சில வரையறைகள், சட்டதிட்டங்களுக்குட்பட்டதாய், உயர்ந்த குறிக்கோள்களைத் தன்னகத்தே அமைந்ததாய் விளங்கியது. அந்நாகரிகத்தின் நலன்களையும், கொள்கைகளையும் வகுத்து உலகுக்கு ஈந்தார் வள்ளுவனுர். ஒவ்வொரு குறளும் அநேக ஆயிர வருடங்களின் அனுபவங்களை ஒரு சிறு அளவில் திரட்டித் தரும் ஒரு தங்கக்

கட்டி. நான் குறள் படிக்கத் தொடங்கிய காலமுதலே என் நினைவினின்றும் என்றும் அகலா நிற்கும் குறள் ஒன்று உண்டு. அதாவது:

"ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை"

எவனொருவன் செல்வமோ, பதவியோ, புகழோ, மற்றதொரு நலனை அடைய விரும்பின், தான் அதை அடைவேன் என்ற நம்பிக்கையில் என்றும் தளர்வற்றவனாய் அதற்குரிய முயற்யில் இடையறாது ஈடுபட்டு வருவானாயின், அந்நலன் அவனிருக்குமிடத்திற்கு வழி கேட்டு அவனை வந்தடையும் என்பது அதன் கருத்து. இந்தக் குறளை நான் முதலில் படித்ததற்கு அநேக ஆண்டுகளுக்குப் பின் ஓர் அமெரிக்கப் பெரியார் எழுதிய "Think and grow rich" என்றப் புத்தகத்தைப் படித்தேன். அது பல நூறு பக்கங்கள் கொண்ட புத்தகம். மிகவும் அருமையான உண்மைகள், அநுபவங்கள், மனித சரித்திரங்கள் எல்லாம் அடங்கிய நூல். ஆனால், அந்த நூல் முழுவதும். முதல் பக்கம் முதல் கடைசிப் பக்கம்வரை அந்த ஒரு சிறு குறளுக்கு விரிவுரையே. நம் மொழியின் பெருமையை என்னென்று சொல்வது! அநேக நூறு பக்கங்களில் ஆங்கிலத்தில் விளக்க வேண்டியிருக்கும் ஓர் உண்மையை ஆறு சொற்களில் அழகாக விளங்க வைக்கும் வனப்பும் வன்மையும் பெற்ற மொழி நம்மொழி! அவ்வாறே குறள் ஒவ்வொன்றும்; அவ்வாறே சங்க நூல் ஒவ்வொன்றும்.

சில நூற்றாண்டுக்குப் பின் தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் முதலிய பக்தி நூல்களில் தமிழ் இறைவனுக்கும், சமயத்திற்கும், மக்களுக்கும், செய்த சேவை அம்மொழியின் இதர பல நயங்களையும், திறன்களையும் மிளிரச்செய்தது. திருவுந்தியார் முதல் சிவஞான மாபாடியம் வரையுள்ள சைவ சித்தாந்த நூல்களால் யோகஞானம் வாய்ந்த அருந்திறத்தவர், கூர்மையாய் ஆய்ந்து அறியும், நூலளவிலே நிற்கும் உண்மைகளையும் தெளிவுபடக்கூறும் திறன் தனக்கு உளது என்று நம் மொழி நிரூபித்தது. பல மொழிகளைக் கற்றறிந்த ஐரோப்பியப் பேரறிஞர் பலர் தமிழைப் படித்துப், பாடிப், பேரானந்தம் உற்றனர் என்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆனால் வியப்பல்ல.

தகைமை தாங்கியதும், இனிமை பயப்பதுமான மொழியைத் தம் தாய்மொழியாய்ப் பெற்ற தமிழ்மக்கள் அதன் மீது சென்ற நூற்றாண்டில் போதிய அன்பு செலுத்தாதிருந்தது. இறைவனைச் சார்ந்து தமிழையே தனக்குற்ற துணையாகக் கொண்டி

ருந்த உயர்திரு. பாண்டித்துரைத் தேவரவர்களால் தாங்கமுடியாததாயிற்று. ஒரு சமயம் அவர்கள் இராமநாதபுரத்திலிருந்து மதுரைக்கு வந்திருந்தபொழுது, அவர்கள் நண்பர் எவர் வீட்டிலும் கம்பராமாயணமாவது, திருக்குறளாவது இல்லையாம். அவர்களது அன்பு, சக்தியாய் மாறி, தமிழ் மக்களிடையே தமிழ்ப் பற்றும், தமிழறிவும் பரவுமாறு இச்சங்கத்தை 1901ம் ஆண்டு நிறுவினார்கள். அதன்பின் பத்தாண்டுக்காலம் இச்சங்கத்தின் வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாய்த் தங்கள் உடலாலும், பொருளாலும், அன்பாலும் அதைவூட்டி வளர்த்து இறைவன் திருவடி நிழலை அடைந்தார்கள். அவர்கள் எண்ணியாங்கு இச்சங்கம் தமிழுக்கும், உலகுக்கும் பயனளிக்கும் முறையில் அதனை நிலைபெறச் செய்வதே தமிழ் மக்கள் அவர்களுக்குச் செய்யக் கூடிய கைம்மாறு. அவர்களை என்றும் மறவாதிருத்தலும் நம் கடன்.

சங்கத்தின் தலைவராய் இப்பொழுது பணியாற்றும் திரு. சண்முக இராசேசுவரசேதுபதி அவர்களைத் தமிழுலகம் நன்கறியும். அவர்கள் அமைச்சராக இருந்தபொழுது, சென்னை அரசியல் காரியாலயத்தில் பணியாற்றும் வாய்ப்பும் பெற்றிருந்தேன். அவர்களது தலைமையால் இச்சங்கம் மணம் பெறுகிறது.

இச்சங்கத்தின் துணைத்தலைவர் எனது சிறந்த நண்பர் சர். திரு. பி. டி. இராசன் அவர்கள், தமிழன் மாண்பு எத்தகையது, தமிழன் வாழ்க்கை எவ்வித நலன் உடைத்து என்பவற்றுகு அவர்களும், பாளையம் வீடும் எடுத்துக் காட்டுகள். நிறைந்த செல்வம் படைத்தவர்கள்; சிறு வயதிலேயே பெரும் பதவிகள் பெற்றவர்கள். ஆனால், வழங்குவதே தமிழர் பண்பு. அவர்களது செல்வமும், செல்வாக்கும் தமிழுக்கும், தமிழ் நாட்டிற்குமே பயன்படுகின்றன.

> "அழல் மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம்
> நிழல் மரம்போல் நேரொப்பத் தாங்கி—பழுமரம்போற்
> பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
> நல்லாண் மகற்குக் கடன்"

என்னும் நாலடியாரின் வாக்குக்கு விரிவுரையே சர். பி. டி. இராசன் அவர்களது வாழ்க்கை.

இச்சங்கச் செயலாளரும், ஆட்சி அலுவலர்களில் பலரும் எனக்கு உற்ற நண்பர்கள். அவர்களால் நடத்தப்படும் இச்சங்கம் பல துறைகளிலும் விரிவடைந்து சிறந்த முறையில் தமிழுக்கும், உலகுக்கும் உதவும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு அருளுமாறு இறைவனை வழுத்துகின்றேன்.

இந்த ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கவேண்டு மென்று கேட்டுக்கொண்ட பொழுது, இந்தச் சங்கமானது தற் பொழுது செய்துவரும் சேவைகளை எந்தெந்த முறைகளில் சிறப் பித்து, விரித்துச் செய்யலாம் என்று ஆராயுமாறு, சர். பி. டி. இராசன் அவர்கள் விரும்பினார்கள். நாம் எந்த முயற்சிகளில் ஈடு படவேண்டும் என்று எண்ணும்பொழுது, எந்த நோக்கங்களு டன் நாம் செயலாற்ற வேண்டும். நம் வாழ்க்கையின் இலக்க ணங்கள் என்ன என்ற கேள்விகள் முதலில் எழுகின்றன.

ஒரு சமுதாயத்தின் நிலை அதன் உள்ளத்தைப் பொறுத்தது. வாழ்க்கையின் குறிக்கோள்களை எந்த முறையில் ஒரு சமுதாயம் வகுத்திருக்கின்றதோ, அந்த அளவே அந்தச் சமுதாயம் உயர்நிலை எய்தல் கூடும்.

“வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு”

என்ற குறளில் உள்ளம் என்ற சொல்லுக்கு எண்ணம், கொள்கை என்று பொருள் கொள்வோமாயின், தனி மனிதனைக் குறித்து மட்டுமல்ல, ஒரு சமுதாயத்தையும், ஏன், உலகையுமே குறித்துக் கூறப்பட்ட மறைமொழியாகும் இது.

இந்நாளில் உலகில் மிகுந்த தோள்வலி படைத்த நாடுகளாக விளங்குபவை உருசியாவும் (The Soviet Union) அமெரிக்கா வுமே. (The United State of America)

1905ம் ஆண்டில் நடந்த உருசிய–ஜப்பானிய யுத்தத்தில் உருசிய தேசமானது, நின்று போர்செய்யும் வீரமின்றி, ஜப்பானியரின் சிறப்போங்கும் முறையில், சமாதான ஒப்பந்தம் செய்துகொண் டது. 1917ம் ஆண்டில் உலகப் பெரும்போரில் ருசிய வீரர்கள் எதிரிகளிடம் போர்செய்வதை விடுத்துத் தங்கள் சேனுபதிகளை யும், தளகர்த்தர்களையுமே தாக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள். ஒரு நாட்டிற்காக அந்நாட்டு மகன் எவனும் தன் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருப்பதே அந்நாட்டின் நன்னிலைக் குச் சான்றாகும். தமிழ்நாடு உன்னத நிலையில் இருந்த நாளில், அதன் பெருமைக்குக் கேடிழைக்கும் முறையில் போர் மூண் டால், தமிழ்மக்கள் ஊக்கத்துடன் போர்க்களம் சென்றது மட்டு மன்றித், தமிழ்நாட்டுத் தாய்மாரும் தங்கள் செல்வரை மகிழ்ச்சி யுடன் போருக்கு அனுப்பிவைத்தார்கள்.

மூதில் மகளிர் என்று போற்றப்பட்ட அத்தகைய வீரப் பெண்டிர் பலரின் செயலைப் புறநானூற்றில் நாம் காண்கிறோம். ஒரு பெண்ணின் தமையன் போர்க்களத்தில் யானையை வீழ்த்தித்

தானும் இறந்தான். அவள் கணவன் பகைவர் தன் நாட்டினுள் இறங்காவண்ணம் அவர்களை எதிர்த்து உயிர் நீத்தான். பின்னும் போர் மூள, தனது ஒரே மகனை ஒருதாய் ஊக்கமூட்டிப் போருக்கு அனுப்புகிறாள்.

"கெடுக சிந்தை! கடிது இவள் துணிபே!
மூதில் மகளிர் ஆதல் தகுமே.
மேனாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே;
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட்டனனே;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே"

இவ்வாறு ஒவ்வொரு தாயும், ஒவ்வொரு பிள்ளையும் நாட்டுக்காகத் தங்களை முற்றிலும் தியாகம் செய்வதென்றால், அந்நாடானது தன்னை முற்றிலுமே ஒவ்வொரு தாய்க்கும், ஒவ்வொரு பிள்ளைக்குமாகத் தியாகம் செய்யும் முறையில் தனது அரசுமுறையையும், சமுதாயத்தையும் அமைத்துக்கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

1917-ஆம் ஆண்டில் ரஷ்யாவின் அரசு முறையும், சமுதாய அமைப்பும் அவ்விதம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆகவே மக்கள் அந்நாட்டுக்காகத் தங்கள் உயிரை இழக்கத் தயாராக இல்லை. புரட்சி ஏற்பட்டது. அதன் பலனாய் இறுதியில் முற்றிலும் புது முறையில் சமுதாயமும், அரசுமுறையும் அமைக்கப்பட்டன. அப்புது முறையின் அடிப்படையான கொள்கைகளை ஆராய்ந்து Sidney and Beatric webb என்னும் தம்பதிகள் தங்கள் மகத்தான, "Soviet Communism; A new civilization" என்னும் புத்தகத்தில், அதை ஒரு புது நாகரிகம் என்று சித்தரித்திருக்கிறார்கள், அதன் அடிப்படையான கொள்கைகளை எண் கூறாகப் பாகுபடுத்தி அன்புடன் போற்றுகிறார்கள். அக்கொள்கைகளின் தன்மையையோ, அவைகளால் விளையும் நன்மை தீமைகளையோபற்றி நாம் இங்குச் சிந்திக்க வேண்டிய அவகாசமுமில்லை; அவசியமுமில்லை. உணர வேண்டியது ஒன்றே. அதாவது, ஒரு நாட்டின் நலனைப் பாதுகாப்பது அதன் உள்ளக் கிடக்கையே என்பது. ஒரு நாட்டின் உள்நின்று அதை யூட்டி வளர்க்கும் சக்தியாய் இருப்பதும் அல்லது அதனுடனிருந்து

கொல்லும் வியாதியாய் இருப்பதும் அந்நாட்டு மக்களின் கொள்கைகளேயாம்.

அவ்வாறே மிகுந்த தோள்வலி படைத்த அமெரிக்க நாட்டையும் பார்க்கின்றோம். அதுவும் சில அரிய உண்மைகளின் அடிப்படையில் கட்டப்பட்டது. அந்த உண்மைகள் என்றும் நிலவும் அழகுடன் The American Declaration of Independenceல் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளுக்கு விரிவுரை Abraham Lincon-ன் அரிய பேச்சுகளிலும், America-வின் Supreme Court-ன் மணி யொளிவீசும் தீர்ப்புகளிலும் காண்கின்றோம்.

தமிழ் நாடு, தமிழ் மரபு, தமிழ் நாகரிகம் இவைகளின் அடிப்படைக் கொள்கைகள் என்னவென்று ஆராய்வது இப்பொழுது நம் கடமைகின்றது. தமிழ்நாடு என்ற மாத்திரத்திலேயே மாபெரும் கோபுரங்கள் நம் மனக்கண் முன்னே தோன்றுகின்றன. நம் நாட்டு நாகரிகம். நாற்பெரும் நற்றூண்களால் தாங்கப்பட்டதொரு அழகிய கோபுரமாக எனக்குக் காட்சியளிக்கிறது. அதன் முதல் தூண் அறம் என்பது. அது எண்ணுதற்கும் அரியதொரு ஞானசக்தி. அதன்வழி நின்றோர்க்கு அது சிறப்பீனும் செல்வமுமீனும். தர்மம் தலைகாக்கு என்றும் முதுமொழி குறிப்பதுவும் அதுவே. ஆனால் அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம் ஆம். ஆதலின், "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே; செல்லும் வாய் எல்லாம் செயல்" வேண்டும். அதினின்றும் அறம் செய்யும் வகை யாது, என்ற கேள்வி பிறக்கின்றது. அதற்குப் பதிலே தமிழ்ப் பண்பின் இரண்டாவது நற்றூணாகிய அன்பு என்பது.

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்;
அருளெனும் குழவியும் அணையும்.

அன்பே சிவம்; அயரா அன்பினாலேயே அரன் கழல் சேர்தல் கூடும். எவ்வாறு அன்போடியைந்த வாழ்வையும் சமுதாயத்தையும் அறம் வளர்க்கின்றதோ, அவ்வாறே அன்பற்ற சமுதாயத்தை அறம் வெறுக்கின்றது.

"என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்"

தமிழ் வாழ்க்கையின் மூன்றாவது நற்றூணாவது பொருள். பொருளீட்டும் முயற்சி இறைவனை விட்டு மனிதனைப் பிரிக்கும் தன்மையது என்பது தமிழர் கொள்கையல்ல. தீதற்ற வழியில் பொருள் சேர்க்கும் முயற்சி இறைவனுடன் ஆன்மாவைப் பிணைக்கும் ஒரு கருவி என்பதே தமிழ்ப்பண்பு. ஆணவ மலத்தால் சூழப்

பெற்று மயக்கமுற்றிருக்கும் ஆன்மாவானது அறிவும் நல்லுணர்வும் பெறுமாறு தனுகரண புவன போகங்களை இறைவன் அதற்கருளுகிறான் என்பதே தமிழ்மறை, அன்புகலந்த வழியில் பொருள் தேடி அதை வழங்கி அனுபவித்தல் இன்பம் பெறும் வழி. ஆதிகாலத் தமிழ்மக்கள் திரவியம் தேடுவதற்காகத் திரை கடல் ஓடினார்கள். ஆங்காங்கே தங்கள் குடிகளையும் ஏற்படுத்தினார்கள். அகத்துறை இலக்கியத்தின் பெரும்பகுதி தமிழ்மகன் பொருள் தேட இதர நாடுகளுக்குச் செல்லும் வழக்கத்தின் அடியாகப் பிறந்தது. தலைவனும் தலைவியும் பிரிய நேர்வதால் ஏற்படும் உள்ளக் கிளர்ச்சிகளை அவ்விலக்கியம் சித்தரிக்கின்றது.

"அறனீனும் இன்பமும் ஈனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

என்றார் வள்ளுவனார். அறமும் பொருளும் பிரிக்க முடியாத அளவில் இணைக்கப்பட்டிருக்கின்றன தமிழ்ப் பண்பில்.

செல்வமும், இன்பமும் மக்களனைவரிடமும் பரவி நிற்க வேண்டும் என்பது தமிழ் மரபின் நான்காம் நற்றூண் ஆகும். "யான் பெற்ற செல்வமும் பெறுக இவ்வையகம்" என்றார் திருமூலர்.

"காக முறவு கலந்துண்ணக் கண்டீர்;
அகண்டாகார சிவ
யோகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித்
ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிட
நாம் இனி யெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும்
செகத்தீரே!"

என்று அழைத்தார் தாயுமானவர்.

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல், வேறொன் றறியேன்; பராபரமே,

என்று வாழ்க்கையின் நோக்கத்தை வரையறுத்தார்.

செல்வம் படைத்தல் வழங்குதல் பொருட்டு என்பது தமிழ்ப் பண்பு. தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார்க்கு நல்குரவு, வழங்குவது உள்வீழ்தல் என்றார் பரிமேலழகர்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" என்றார் வள்ளுவனார்,

பொருட் செல்வம், சமயச் செல்வம், கல்விச் செல்வம், கலைச் செல்வம் அனைத்தும் மக்கள் அனைவரிடமும் பரந்து சென்று நின்று, அவர்கள் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தி இன்புறச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவது தமிழ்ப் பண்பின் நான்காவது நற்றூண்.

அறம், அன்பு, பொருள், பரப்பு ஆகிய இத்தூண்கள் மாத்திரம் கொண்டதாயிருந்தால் தமிழ்வாழ்க்கை ஏனைய சமுதாய வாழ்க்கையினும் தனிச் சிறப்புடையதாகாது. அத் தனிச்சிறப்பு இத்தூண்கள் தமக்கேற்ற அழகிய கோபுரத்தைத் தாங்குவதால் தமிழ் வாழ்க்கைக்கு ஏற்படுகிறது. அந்தக் கோபுரம் பதிஞானம், இறைகழல் சேரல், உய்தல் என்பது தனு, கரண, புவன போகங்களால் ஆன்மா அடையும் திருப்தி. அம்மட்டில் நின்றுவிடுவதற்காக அல்ல, தன்னையும், தன் பழியையும் அறிவதற்காகவே என்பது தான் தமிழ் மாண்பைச் சிறக்கச் செய்யும் இலக்கணம்.

அறம், அன்பு, பொருள், பரப்பு, பதிஞானம் இவைகள் தமிழ்ப் பண்பின் ஐந்தெழுத்தாம்.

இப் புழைய கொள்கைகள் இந்நாளில் நமக்குப் பயன்படுமா என்று சிலர் கேட்கலாம். நம் கொள்கைகளை மாற்றினால் நம் பண்பினின்று நாம் தவறியவர்களாவோம். கொள்கைகள் நமக்குச் சேவை செய்யும் முறைகளை மாற்றி அமைத்துக்கொள்வதன் மூலம் நாம் நம் வளர்ச்சிக்கு ஏது தேடிக் கொள்கின்றோம்.

முன்னாள் சமுதாயத்தின் அச்சாணியாயிருந்தவன் அரசன். அவனைச் சுற்றியதே உலகம். மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி என்றார் வள்ளுவர்.

> "நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று:
> மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்பது புறநானூறு. இன்று நாமெல்லோரும் நம் நாட்டு மன்னர்கள். குடி என்ற சொல்லை மாற்றியமைக்க வேண்டியவர்களாகின்றோம். நாமார்க்கும் குடியல்லோம். மக்களது உரிமைகளையும் கடமைகளையும் முந்நாள் நூல்கள் வகுத்தவாறு இப்பொழுது வகுப்பது பொருந்தாது. பொருளை மக்களுக்கு வழங்கும் முறையிலும் இந்நாள் மக்கள் மாறுதல் எதிர்பார்க்கிறார்கள். மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளும் முறையிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இவைகளெல்லாம் நாம் தடுக்க முடியாத பெரும் நிகழ்ச்சிகளால் ஏற்படுபவை. அவைகள் நம் நாட்டினுள் வாரா என்று எண்ணுவது தீக்கோழியின் புத்தி.

அச்சக்திகளுக்கு நம் பண்புகளையும், நம் நாட்டில் தொன்று தொட்டு நின்று வரும் வாலறிவன் நற்றாள் தொழும் சிந்தையை யும் அசைக்கமுடியாத முறையில் வழி வகுக்கவேண்டியது நம் கடனாகிறது. இல்லையேல் நம் பண்புகளுக்கு முற்றிலும் மாறான கொள்கைளும், செயல்களும் நம் கண் முன்னேயே நம் மக்களைப் பற்றிக் கொள்ளக்கூடும். தமிழ்ப் பண்பின் ஐந்தெழுத்திற்கேற்ப உலகத்தின் புதுச்சக்திகளைத் திருத்தி அமைத்துப் பிரயோகிக்கும் வலிமை நமக்கு ஏற்படுமாறு நம் மக்கள் மனத்தைப் பண்படுத் தும் நூல்கள் தேவை. அவைகளை Citizenship நூல்கள் என்று சொல்லலாம். அந்த முறையில் சொற்பொழிவுகளும் நம் சங்கத்தின் ஆதரவில் நடத்தப்படலாம்.

சங்கத்தில் இப்பொழுது நூல்கள் பிரசுரிக்கப்படுகின்றன. அவை தவிர சங்க ஆதரவுபெற்ற நூல்களையும் சங்கநூல்களாகக் கொள்ளலாம். யாரேனும் ஓர் ஆசிரியர் அவர் இயற்றும் நூல் சங் கத்தின் கொள்கைகளுக்கு ஒத்ததாய், அதன் நோக்கங்களை நிறை வேற்றுவதாய் இருப்பதாக எண்ணினால், அந்த நூலை அவர் சங் கத்தின் பரிசோதனைக்கு அனுப்பலாம். சங்கத்தின் அறிஞரால் அந்நூல் ஒப்புக்கொள்ளப்பட்டால், அதைச் சங்க நூல் என்று சொல்லும் உரிமை அவ்வாசிரியருக்கு வழங்கப்படும். சங்க நூல் களை முறையாக வாங்குபவர்கள் என்று சங்க அங்கத்தினரின் ஒரு பகுதியினர் இருத்தல் வேண்டும். சங்க நூல்களின் பதிப்பு ஒரே வடிவத்ததாக, அழகாக அடுக்கி வைப்பதற்கு இயைந்ததாய் இருத்தல் வேண்டும். சங்க ஆதரவுபெற்று நூல் வெளியிடும் ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட தொகைப் புத்தகங்களைச் சங்க வாயி லாகச் சங்கம் குறிப்பிடும் விலைக்குச் சங்கத்தின் புத்தக அங்கத்தி னருக்கு விற்க வேண்டும். இவ்வாறு நாலாம் சங்க நூல் தொகை ஒன்று இந்நாளின் போக்குக்கேற்பச் சங்கப் பண்பாடுகளுடைய தாய் இலங்குதல் கூடும்.

இந்தச் சங்கம் தமிழுக்குச் செய்துவரும் தொண்டைப் பின் பற்றிக் கலாசாலையாரும், இதர சங்கத்தாரும் பணியாற்றி வரு கிறார்கள். அவர்களனைவருக்கும் நம் நன்றி; நாள்தோறும் நன் மலரால் தமிழ்த்தாயை அலங்கரிக்கும் பெருமையை இச்சங்கத் திற்கு அருள இறைவனை வழுத்துகின்றேன்.

வாழ்க தமிழ்! வாழ்க சங்கம்!

விவேகாநந்தா அச்சகம், மதுரை,-57.